# லங்கா பொஸ்பேட் லிமிடட்

ஆண்டறிக்கை 2018/19

விவசாய, கிராமிய பொருளாதார நடவடிக்கைகள், கால்நடை
அபிவிருத்தி, நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு

**<u>நோக்கு</u>**

*“ எப்பாவல பாறைப் பொஸ்பேட் படிவுகளை உத்தம மட்டத்தில் பயன்படுத்துவதன் மூலம் எங்கள் தாய்நாட்டின் மண்வளத்தினை வளப்படுதத்துவதற்கு தேவையான பொசுபரஸ்ஸினை வழங்குதல்”*





*பணி*

*“சூழல் நேய மற்றும் நவீன தொழில்நுட்பச் செயன்முறையினூடாக பொசுபரஸ்ஸில் தன்னிறைவு அடைவதன் மூலம் தேசிய பொஸ்பேட் உரத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்தல்”*

## *உள்ளடக்கம்*


- பணிப்பாளர் சபை 01
- தாபனத் தகவல்கள் 02
- நிதிசார் முக்கிய பதிவுகள் 03
- தலைவரின் அறிக்கை 04-06
- நிறுவனக் கட்டமைப்பு 07
- அனுமதிக்கப்பட்ட பதவியணி 08
- சிரேஷ்ட முகாமையாளர்கள் 09
- முகாமையாளர்கள் 10
- பணிப்பாளர்களின் அறிக்கை 11-16
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை 17
  - கணக்காய்வாளர் அறிக்கை 18-23
  - விபரமான வருமானக் கூற்று 24
  - நிதி நிலைமைக் கூற்று 25
  - உரிமையாண்மை மாற்றக்கூற்று 26
  - காசுப்பாய்ச்சற் கூற்று 27
  - முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் 28-59
- செயற்பாடுகளின் மீளாய்வு 60-62
- கூட்டத்திற்கான அறிவித்தல் 63
- பதிலிப் படிவம் 64

# பணிப்பாளர் சபை



திரு. எச்.எம். கருணாரத்ன ஹேரத்
தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்



திரு. டீ.யூ. ஜயவர்த்தன
நிறைவேற்றுப் பணிப்பாளர்



திருமதி. டீ.எச.எஸ்..பல்லேபெரும
பணிப்பாளர்



திருமதி. பீ.எச் ஹந்துன்ஹேவா
பணிப்பாளர்



திரு. எஸ்.ஜே. பரணகம
பணிப்பாளர்



திரு.ஜே.பீ.யூ.எஸ். டி சில்வா
பணிப்பாளர்

## *தாபனத் தகவல்கள்*

### கம்பனியின் பெயர்

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனம்

### அமைவிடமும் சட்ட அமைப்பும்

வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் கம்பனி, அரச சுரங்கத்தொழில் மற்றும் கனிப்பொருட்கள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல பொஸ்பேட் செயற்திட்டத்தைப் பொறுப்பேற்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க பொதுக் கம்பனிகளை அரச உடைமையாக்கப்பட்ட வியாபாரத்தை பொறுப்பேற்றல் அல்லது பொதுக் கூட்டுத்தாபனங்களின் மாற்றத்தின் மூலம், 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியாக 1992, ஜூலை 10ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது. எவ்வாறாயினும் பின்னர், இக்கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### பிரதான நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

பல்லாண்டுப் பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்தக்கூடிய பாறைப் பொஸ்பேட்டுக்களை அகழ்தல், பதனிடல், விற்பனை செய்தல் என்பன கம்பனியின் பிரதான நடவடிக்கைகளாகும்.

**பதிவு இல.** பீபி 308

### பணிப்பாளர் சபை

திரு. எச்.எம். கருணாரத்ன - தலைவர்
திரு. டீ.யூ. ஜயவர்த்தன - நிறைவேற்றுப் பணிப்பாளர்
திருமதி. டீ.எச்.எஸ் பல்லேபெரும - பணிப்பாளர்
திருமதி. பீ.எச் ஹந்துன்ஹேவா - பணிப்பாளர்
திரு.எஸ்.ஜே. பரணகம - பணிப்பாளர்
திரு. ஜீ.பியூ.எஸ். டி சில்வா - பணிப்பாளர்

### கம்பனி செயலாளர்

பைனான்சியல் சேர்விசஸ் அன்ட் கொமர்ஷல் ஏஜன்சீஸ் (பிரைவட்) லிமிடட்,
இல. 300/3, நாவலை வீதி, நாவலை

### இறுதி தாய் நிறுவனம்

கம்பனியின் விநியோகிக்கப்பட்ட பங்குகள், இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திறைசேரி செயலாளரால் முழுமையாக உரிமையாக்கப்பட்டுள்ளன.

### இணை அமைச்சு

விவசாய, கிராமியப் பொருளாதார நடவடிக்கைகள், நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு,
இல 288, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,இராஜகிரிய

### பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

இல.73 1/1,புதிய களனி பாலம் வீதி,
கொழும்பு 14. தொலைபேசி: 94112459906/7
தொலைநகல்: 94112459908

### கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்
306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை.

### வரி ஆலோசகர்கள்

அமரசேகர அன்ட் கோ.
பட்டயக் கணக்காளர்கள்,
இல. 12,ரொட்டண்டா கார்டின்ஸ்
கொழும்பு 03.

### வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
தேசிய சேமிப்பு வங்கி
மக்கள் வங்கி

# *நிதிசார் முக்கிய பதிவுகள்*

| **ஆண்டிற்கானது** | **(ரூபா. '000)** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2018/19** | **2017/18** | **2016/17** | **2015/16** | **2014/15** |
| வருமானம் | 530,975 | 493,551 | 366,094 | 562,735 | 530,431 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் /(நட்டம்) | 32,354 | 3,220 | (10,534) | 26,587 | 100,089 |
| விரிவான மொத்த வருமானம் | 109,726 | (4,475) | (14,577) | 29,578 | 101,173 |

| **வருட இறுதியில் உள்ளவாறு** | **(ரூபா. '000)** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2018/19** | **2017/18** | **2016/17** | **2015/16** | **2014/15** |
| பங்குதாரர்களின் நிதியங்கள் | 774,560 | 669,834 | 740,738 | 760,315 | 760,737 |
| தொழிற்படு மூலதனம் | 480,273 | 419,904 | 442,665 | 451,108 | 411,167 |
| மொத்த சொத்துக்கள் | 891,638 | 757,572 | 836,113 | 860,451 | 844,245 |
| பதவியணி கிரயம் | 277,976 | 230,782 | 224,678 | 236,020 | 192,571 |
| ஊழியர்களின் எண்ணிக்கை (**எண்**) | 328 | 333 | 335 | 347 | 339 |

| **பங்கு ஒன்றுக்கு** | **2018/19** | **2017/18** | **2016/17** | **2015/16** | **2014/15** |
|---|---|---|---|---|---|
| வருவாய் (ரூபா) | 15.13 | (0.62) | (2.01) | 4.08 | 13.95 |
| தேறிய சொத்துக்கள் (ரூபா) | 106.82 | 92.38 | 102.15 | 104.86 | 104.91 |

| **விகிதங்கள்** | **2018/19** | **2017/18** | **2016/17** | **2015/16** | **2014/15** |
|---|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் (தடவைகள்) | 12.75 | 11.09 | 7.90 | 7.41 | 8.91 |
| பங்குதாரர்களின் நிதியம் மீதான வருவாய்(%) | 14.17% | -0.67% | -1.97% | 3.89% | 13.2% |

# தலைவரின் செய்தி



பொஸ்பேட் படிவுகள் எதிர்வரும் 50 ஆண்டுகளுக்குள் குறைவடைவதுடன், மீதமுள்ள இருப்பு அடுத்த 100 ஆண்டுகளுக்குள் குறைவடையும் என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும். இம்முடிவானது இவ்விலைமதிப்புள்ள இருப்பில் உள்ள எமது பொஸ்பேட் வளங்களை நாம் என்ன செய்கின்றோம் என்பதில் தங்கியுள்ளது. புவியியல் ஆராய்ச்சித் திணைக்களத்தினால் 1971ஆம் ஆண்டு ஏப்பிரல் 04ஆந் திகதியன்று எப்பாவல பொஸ்பேட் படிவு கண்டுபிடிக்கப்பட்டது. படிவானது வட பகுதியில் 40 மி மெ தொன் மற்றும் தென் பகுதியில் 20 மி மெ தொன்னுமாக 60 மில்லியன் மெற்றிக் தொன் பொஸ்பேட்டைக் கொண்டுள்ளது. இப்படிவானது 324 ஹெக்டேயர் நிலப்பரப்பினை உள்ளடக்கியவாறு சராசரி கடல் மட்டத்திலிருந்து 200 மீற்றர் உயரத்தில் ஆறு குன்றுகள் வடிவத்தில் அமைந்துள்ளது. 33-40% ஆன $P_2O_5$ கொண்டுள்ள இத்தாதுப்பொருளானது 60 மில்லியன் தொன் என மதிப்பிடப்பட்டு உள்ளதுடன், உலகிலேயே வளமிக்க மற்றும் தனிச் சிறப்புமிக்க பொஸ்பேட் படிவுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் கம்பனி (LPL) அரச சுரங்கத்தொழில் மற்றும் கனிப்பொருட்கள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல பொஸ்பேட் செயற்றிட்டத்தை பொறுப்பேற்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொதுக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளைப் பொதுக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் நியதிகளுக்கு அமைய 1992 ஆம் ஆண்டு யூலை 10 ஆம் திகதி அன்று கூட்டிணைக்கப்பட்டது. இது இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திறைசேரிச் செயலாளருக்கு முழுமையாகச் சொந்தமானதாகும். LPL ஆனது, 1998 நவம்பர் மாதம் வரையறுக்கப்பட்ட போகல கிரபைட் கம்பனியிடமிருந்து பிரிக்கப்பட்டதிலிருந்து ஒரு முழு சுதந்திரக் கம்பனியாக தொழிற்பட்டு வருகின்றது.

தற்போது LPL இலங்கையில் நீண்டகாலப் பயிர்ச்செய்கைகளுக்கான பொஸ்பேட் உரமாகப் பயன்படுத்தப்படும் எப்பாவல பாறைப் பொஸ்பேட் (ERP) மற்றும் உயர் தரமிக்க எப்பாவல பாறைப் பொஸ்பேட் (HERP) ஆகிய இரு வகையான பாறைப் பொஸ்பேட் உரங்களை உற்பத்தி செய்கின்றது. இதற்கு மேலதிகமாக,

2014ஆம் ஆண்டு முதல் LPL தென்னை உரக் கலவைப் பொறித்தொகுதி ஒன்றை இயக்கி வருகின்றது. எவ்வாறெனினும், இப்பெறுமதி மிக்க பாறைப்படிவுகளின் மூலம் நாட்டிற்கு மிகச் சிறந்த பயன்களை வழங்கக்கூடியதாக இருக்கின்றது

தற்போது ஏறத்தாழ 60,000 மெற்றிக் தொன் எப்பாவல பாறைப் பொஸ்பேட்களை நாம் வருடாந்தம் உற்பத்தி செய்து பெருந்தோட்டப் பயிரினத் துறைக்கு அவற்றைச் சந்தைப்படுத்தி வருகின்றோம். நீண்டகாலப் பயிர்களான தேயிலை, இறப்பர், தெங்கு, ஏற்றுமதிப் பணப் பயிர்கள் மற்றும் பழப் பயிர்ச்செய்கை ஆகியவற்றிற்கு எமது உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தேயிலை பயிர்ச் செய்கை 60%மான எப்பாவல பொஸ்பேட் பயன்பாட்டினை ஆக்கிரமிக்கின்ற அதேவேளை இறப்பர் மற்றும் தெங்கு துறைகள் பயன்பாட்டின் 30% பகிர்வைக் கொண்டுள்ளன. முக்கியமாக ஏற்றுமதிப் பணப் பயிர்களும் பழப் பயிர்களும் எஞ்சிய பகுதியைப் பயன்படுத்துகின்றன. உள்நாட்டு பொஸ்பேட் உரங்களைப் பயன்படுத்துவதால் ஆண்டுதோறும் ரூபா 1,500 மில்லியனிற்கும் மேலான குறிப்பிடத்தக்க அன்னிய செலாவணியை மீதப்படுத்தக் கூடியதாக உள்ளது.

2018/2019 இல் முடிவடைந்த நிதியாண்டில் பெற்றுக் கொண்ட 530.9 மி.ரூபா திரண்ட விற்பனைப் புரள்வு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சாதகமான அதிரிப்பாகும். மேலும், லங்கா பொஸ்பேட் லிமிடட்டினால் முறையே எப்பாவல பாறைப் பொஸ்பேட்டுகளில் (ERP) 38,714.25 மெற்றிக் தொன், உயர்தர எப்பாவல பாறைப் பொஸ்பேட்டுக்களில் (HERP) 9,459.55 மெற்றிக் தொன் மற்றும் தெங்குப் உரங்களில் (APM/YPM) 712.42 மெட்ரிக் தொன் விற்பனை அடைவை எய்வதற்கு முடிந்தது.

நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, எப்பாவல பொஸ்பேட் படிவுகளின் உச்சப் பயன்பாட்டின் பொருட்டு நடைமுறையில் காணப்படுகின்ற மற்றும் புதிய வியாபார முயற்சிகளில் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்குத் தேவையான தீர்வுகளை அமுல்படுத்துவதில் கடப்பாடு கொண்டுள்ளது. நாட்டின் மொத்தத் தேவைப்பாட்டை ஈடுசெய்யும் வகையிலான குறுங்கால விளைச்சலைத் தருகின்ற பயிர்ச் செய்கைகளுக்குத் தேவையான திராவகத் தன்மையுள்ள பொஸ்பேட் உர வகைகளான டிரிப்பல் சுப்பர் பொஸ்பேட் (TSP) அல்லது சிங்கல் சுப்பர் பொஸ்பேட் (SSP) ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மற்றும் தேசிய மட்டத்திலான அவற்றின் தேவைப்பாட்டினை நாம் உணர்ந்துள்ளோம்.

எல்பீஎல் நிறுவனம் பொறுப்பு வாய்ந்த ஓர் அரசாங்க நிறுவனமாக பெறுமதி சேர் உற்பத்திகளையும் மனிதனுக்கு உகந்த சூழலையும், தமக்கு உரிய துறைகளில் புதிய அபிவிருத்திகளுடன் இணைந்து செல்லத் தேவையான திறனை வளர்ப்பதற்கு பதவியணி பயிற்சி நிகழ்ச்சிகளையும் அறிமுகப்படுத்துவதற்காக ஒன்றித்து செயல்படுகின்றது.

இறுதியாக, வழிகாட்டல், ஊக்கம் மற்றும் ஒத்துழைப்புகளை வழங்கியமைக்காக விவசாய அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் பணிப்பாளர் சபை ஆகியோருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவகத்திற்கு அதன் எதிர்காலச் செயற்பாடுகள் அனைத்தும் வெற்றி அடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர்
வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனம்

## நிறுவனக் கட்டமைப்பு




3/11/2019 3:30:49 PM

## *அங்கீகரிக்கப்பட்ட பதவியணி*

| **வகை** | **சம்பளக் குறியீடு** | **பதவி** | **பதவிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர் | HM - 2-1 | பொது முகாமையாளர் | 01 |
| | | | |
| | HM - 1-3 | பிரதிப் பொது முகாமையாளர் - உற்பத்தி | 01 |
| | | பிரதிப் பொது முகாமையாளர் - உற்பத்தியற்ற | 01 |
| | HM - 1-1 | நிதி முகாமையாளர் | 01 |
| | | உற்பத்தி முகாமையாளர் | 01 |
| | | செயற்பாட்டு முகாமையாளர் | 01 |
| | | நிர்வாக மற்றும் மனிதவள முகாமையாளர் | 01 |
| | | | |
| மத்தியதர முகாமையாளர் | MM - 1-1 | கணக்காளர் | 01 |
| | | இயந்திரப் பொறியிலாளர் | 01 |
| | | உற்பத்திப் பொறியிலாளர் | 01 |
| | | உள்ளகக் கணக்காய்வாளர் | 01 |
| | | உதவி வழங்கல் முகாமையாளர் | 01 |
| | | உதவி சந்தைப்படுத்தல் முகாமையாளர் | 01 |
| | | பாதுகாப்பு முகாமையாளர் | 01 |
| | | | |
| கனிஷ்ட முகாமையாளர் | JM - 1 - 1 | வழங்கல் உத்தியோகத்தர் | 01 |
| | | நிர்வாக உத்தியோகத்தர் (நிர்வாக மற்றும் மனித வள) | 01 |
| | | ஆலை உத்தியோகத்தர் | 01 |
| | | களஞ்சிய உத்தியோகத்தர் | 01 |
| | | | |
| முகாமைத்துவ உதவியாளர் | MA 2-1 | | 28 |
| | MA 1-1 | | 30 |
| | | | |
| ஆரம்ப மட்டம் | PL - 3 | | 73 |
| | PL - 2 | | 80 |
| | PL - 1 | | 120 |
| **மொத்தம்** | | | **349** |

# சிரேஷ்ட முகாமையாளர்கள்



திரு. எச்.ஆர்.யூ.டீ. பண்டார

பொது முகாமையாளர்



யூ.எஸ்பீ.ஜீ. சூரியாரச்சி

பிரதிப் பொது முகாமையாளர்



திரு. ஜீ.ஏ. சந்திரதாச

உற்பத்தி முகாமையாளர்



திரு. டீ.ஜீ.யூ. சாமர

நிதி முகாமையாளர்



திரு. எஸ்.டீ. ரூப்பசிங்க

செயற்பாட்டு முகாமையாளர்

## *முகாமையாளர்கள்*



கப்டன். கே.ஜீஆர்.பீ. கிரிஎல்ல
பாதுகாப்பு முகாமையாளர்



திரு. டீ.ஆர்.கே. திலகரத்ன
கணக்காளர்



திரு. ஆர்.ஏ.ஏ.பீ. ரணசிங்க
சந்தைப்படுத்தல் அதிகாரி



திரு. எச்ஏ.ரீ. ஜயநந்த
பொறியிலாளர்



திரு. டீ.பி. கீரியவத்த
உள்ளகக் கணக்காய்வாளர்



திரு.எஸ்.ஏ. அபேசிறி
வழங்கல் உத்தியோகத்தர்



திரு. எஸ்.எம்.ஏ.ஆர்.கே. மஞ்சநாயக்க
நிர்வாக உத்தியோகத்தர் (நிர்வாகம், மனிதவளம்)



டீ.ஆர். குணரத்ன
ஆலை உத்தியோகத்தர்



திரு. ஆர்.எம். மத்துமபண்டார
வழங்கல் உத்தியோகத்தர்



திரு. டீ.எஸ்.எம். திசாநாயக்கா
களஞ்சிய உத்தியோகத்தர்

# பணிப்பாளர்களின் அறிக்கை

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனத்தின் (கம்பனி) பணிப்பாளர்கள் 2019 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் 2019 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆண்டறிக்கையையும் இத்துடன் சமர்ப்பிக்கின்றனர்.

## 1.0 கம்பனி பெயர்

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் (பதிவு இல.பீபி 308)

## 2.0 அமைவிடமும் சட்ட அமைப்பும்

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனம், அரச சுரங்கத்தொழில் மற்றும் கனிப் பொருட்கள் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் எப்பாவல பொஸ்பேட் செயற்றிட்டத்தைப் பொறுப்பேற்பதற்கு பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசுடமையாக்கப்பட்ட வியாபாரத்தை 1987 இன் 23 ஆம் இலக்க பொதுக் கம்பனிகளாக மாற்றுவதன் மூலம் 1982 இன் 17ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியாகக் கூட்டிணைக்கப்பட்டது.

எவ்வாறெனினும் பின்னர், இக்கம்பனி 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3.0 பிரதான நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

பல்லாண்டு விவசாயப் பயிரினங்களுக்காக உரமாகப் பயன்படுத்தக்கூடிய பாறைப் பொஸ்பேட்களை அகழ்தல், பதனிடல், விற்பனை செய்வதுடன் தென்னம் பசளைகளைக் கலத்தல் என்பன கம்பனியின் பிரதான நடவடிக்கைகளாகும்.

## 4.0 நிதிக்கூற்று

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்று ஐந்தொகைத் திகதியில் நிறுவனம் தொடர்பான விவகாரங்களின் நிலைமையை உண்மையாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துகின்றன என்பதில் பணிப்பாளர்கள் திருப்தி அடைகின்றனர்.

இந்நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் கருத்திற் கொண்டுள்ளதுடன் இக்கணக்கீட்டுக் கொள்கைகள் நிலைமாறா

வகையில் பிரயோகிக்கப்பட்டிருந்த அதேவேளை அவற்றின் நியாயமான தன்மை, உண்மைத்தன்மை மற்றும் மதிப்பீடுகள் பரிசீலனை செய்யப்பட்டிருந்தன. கணக்கீட்டுக் கொள்கைகளில் பொருண்மையான மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும். நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் மோசடி அல்லது முறைகேடுகள் என்பனவற்றிலிருந்து தடுப்பதற்காக அவர்களின் பொறுப்பின் தேவைக்கான வழிமுறைகள் பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5.0 <u>நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள்</u>

இந் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையை பணிப்பாளர்கள் கருத்திற் கொண்டமையை உறுதிசெய்வதுடன் அக் கணக்கீட்டுக் கொள்கைகள் நிலைமாறா வகையில் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற அதேவேளை அவை தொடர்பான நியாயமான மற்றும் உண்மைத் தன்மைகள் மதிப்பீடு செய்யப்பட்டு இதன் காரணமாக கொடுக்கல் வாங்கல்களின் உண்மைத்தன்மை சரியான முறையில் பிரதிபலிக்கின்றன. கணக்கீட்டு காலப்பகுதியில் எவ்விதமான மாற்றங்களும் கணக்கீட்டுக் கொள்ளைகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6.0 <u>ஆதனம், பொறி மற்றும் உபகரணம் அவற்றின் மதிப்பீடும் தேய்மானமும்</u>

கம்பனியால் ஆண்டின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றிற்காக ரூபா 7,146,545.00 மூலதனச் செலவினமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் நிலைப்பாடுகள், அவை தொடர்பான அசைவுகள், அவற்றின் மதிப்பீடுகள் மற்றும் தேய்மானம் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இல. 5.0 மற்றும் குறிப்பு இல 26 இல் தரப்பட்டுள்ளன.

## 7.0 <u>வரிவிதிப்புகள்</u>

மீளாய்வாண்டிற்காக வரி அறவிடத்தக்க வருமானத்தின் மீது 28% வரிப் பொறுப்பை நிறுவனம் கொண்டிருந்தது.

## 8.0 பங்கிலாபங்கள்

மீளாய்வாண்டிற்காக 2.0 மில்லியன் இடைக்காலப் பங்கிலாபம் பிரகடனப்படுத்தப்பட்டது.

## 9.0 கூறப்பட்ட மூலதனம்

கம்பனியின் கூட்டுமொத்தமான கூறப்பட்ட மூலதனமான ரூபா 72,510,000.00 தொகையில் 7,251,000 எண்ணிக்கையான சாதாரண பங்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டின் போது கூறப்பட்ட மூலதனத்தில் எவ்வித மாற்றமும் இருக்கவில்லை.

## 10.0 பங்குகள்

பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசுடமையாக்கப்பட்ட
வியாபாரத்தை 1987 இன் 23 ஆம் இலக்க பொதுக் கம்பனிகளாக மாற்றுதலின் 2(3) ஆம் பிரிவிற்கு அமைய அரசின் சார்பாக திறைசேரிச் செயலாளர் (அவரது அதிகாரப்பூர்வ நிலையில்) கம்பனியின் தனியான பங்குதாரராகக் காணப்படுகின்றார்.

2018 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் பங்குதாரர்களின் விபரம் பின்வருமாறு:

திறைசேரிச் செயலாளர் (அவரது அதிகாரப்பூர்வ நிலையில்) 7,251,000 சாதாரண பங்குகள்.

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனமானது GSMB டெக்னிக்கல் சேவிசஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தில் ஒரு பங்குதாரராவதுடன், (ஒவ்வொன்றும் 10.00 பெறுமதியான) 100,000 சாதாரண பங்குகளைக் கொண்டுள்ளது.

மேற்குறித்த பங்குகளின் வீதம் 16.66% ஆகும்.

## 11.0 பங்குகளின் மாற்றம்

2019.03.31 இல் உள்ளவாறு கம்பனியின் பங்குகளில் எவ்வித மாற்றமும் இடம் பெற்றிருக்கவில்லை.

## 12.0 கூட்டாண்மை சமூகப் பொறுப்பு

மீளாய்வாண்டின் போது அறக்கட்டளை நோக்கங்களுக்கும், கூட்டாண்மை சமூகப் பொறுப்புக்களுக்குமாக ரூபா 473,254.00 தொகையைக் கம்பனி பங்களிப்பு செய்திருந்தது.

## 13.0 ஊழியர்கள்

ஆண்டின் போது பதவியணியின் மொத்தக் கிரயம் ரூபா 277,976,501.00 ஆகக் காணப்பட்டது.

ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கம்பனியால் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 328 ஆகக் காணப்பட்டது.

## 14.0 பணிப்பாளர்கள்

மீளாய்வாண்டின் போது பின்வரும் பணிப்பாளர்கள் பதவி வகித்திருந்தனர்.

| | | |
|---|---|---|
| திரு. எச்.எம்.கருணாரத்ன ஹேரத் | - | தலைவர் |
| திரு.டீ.யூ. ஜயவர்த்தன | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| திருமதி. டீ.எச்.எஸ். பல்லேபெரும | - | பணிப்பாளர் |
| திருமதி. பீ.எச் ஹந்துன்ஹேவா | - | பணிப்பாளர் |
| திரு. எஸ்.ஜே. பரணகம | - | பணிப்பாளர் |
| திரு. ஜே.பி.யூ.எஸ். டி சில்வா | - | பணிப்பாளர் |

## 15.0 பணிப்பாளர்கள் இராஜினாமா செய்தலும் புதிதாக நியமிக்கப்படலும்

திரு. யூ. ஏ .திசாநாயக்க –தலைவர் (2018.12.20), திரு.ஆர்.என்.கே. ரணவீர - நிறைவேற்றுப் பணிப்பாளர் (2018.12.20), திரு. ஏ.ஏ.எம் பண்டா - பணிப்பாளர் (2018.12.20) திரு. எம்.ஆர். ஞானதிலக்க -பணிப்பாளர் (2018.12.20) ஆகியோர் இவ்வருடத்தில் இராஜினாமா செய்தனர் மற்றும் 2018/19 ஆம் ஆண்டுப் பகுதியில் திரு. எச்.எம்.கருணாரத்ன ஹேரத் – தலைவர் (2019.03.19) மற்றும் திரு.டீ.யூ. ஜயவர்த்தன - நிறைவேற்றுப் பணிப்பாளர் (2019.03.19) திரு. எஸ்.ஜே. பரணகம- பணிப்பாளர் (2019.03.19), திரு. ஜே.பி.யூ.எஸ். டி சில்வா- பணிப்பாளர் (2019.03.19) ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்டனர்.

## 16.0 பணிப்பாளர்களின் ஊதியம்

மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் ஊதியங்கள், கட்டணங்கள் மற்றும் செலவினமாக ரூபா 4,334,541.78 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 17.0 நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள், அவர்களின் சிறந்த அறிவிற்கும், நம்பிக்கைக்கும் அமைய ஊழியர் சேமலாபநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் அரசிற்கு உரித்தான நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் அனைத்தையும் சரியாகவும் உரிய நேரத்திலும் செலுத்தப்பட்டமை குறித்து திருப்தியடைகிறார்கள்.

## 18.0 இணக்கங்கள்

இலங்கையில் மற்றும் வேறு இடங்களில் நடைமுறையில் காணப்படும் சட்டங்கள் அல்லது பிரமாணங்களுக்கு முரணான நடவடிக்கைகள் எதிலும் கம்பனி ஈடுபட்டிருக்கவில்லை.

## 19.0 தொடர்ந்து செல்லல்

கம்பனி எதிர்வு கூறத்தக்க எதிர்காலத்திற்கு தொடர்ச்சியாக தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான வளங்களைக் கொண்டுள்ளது என்பதில் பணிப்பாளர்கள் திருப்தியாக உள்ளனர். இதன் படி, கம்பனியின் சகல நிதிக்கூற்றுக்களும் கம்பனி தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 20.0 கூட்டாண்மை ஆளுகை

சிறந்த கூட்டாண்மை ஆளுகையை பணிப்பாளர் சபை உறுதி செய்கின்றது. ஒரு பொது வணிக நிறுவனம் என்ற வகையில் கம்பனியின் நோக்கங்கள் மற்றும் பங்குதாரர்களின் நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களுக்கு இணங்கும் வகையில் செயற்பாடுகள் உள்ளன என்பதை உறுதி செய்வது பணிப்பாளர் சபையின் கடமையாகும்.

## 21.0 இடர் முகாமைத்துவம்

கம்பனி சட்ட இடர்களுக்கு ஆளாகுவதை விட்டும் நீக்கப்பட்டுள்ளமையை அல்லது குறைக்கப்பட்டுள்ளமையை உறுதிசெய்யும் பொருட்டு அதன் சட்டப்படியான மற்றும் சட்டத் தேவைகளை உணர்வுபூர்வமாகப் பூர்த்தி செய்துள்ளது.

## 22.0 கணக்காய்வாளர்கள்

கம்பனியின் கணக்காய்வாளர்களாக அரசாங்கக் கணக்காய்வாளர்கள் செயற்படுகின்றனர்.

கொழும்பு–14, புதிய களனிப் பாலம் வீதி, இல. 73 1/1, இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் தலைமை அலுவலகத்தில் 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு இடம் பெற இருந்த வருடாந்த பொதுக் கூட்டத்தில் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தால் அமுலாக்கப்பட்ட நடைமுறைக்கு அமைவாக 2019/20 நிதி ஆண்டிற்காக கம்பனியின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தை (அரசாங்கக் கணக்காய்வாளர்கள்) நியமிக்குமாறு பங்குதாரர்களுக்கு பரிந்துரை

செய்வதற்காக வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் பணிப்பாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

புதிய கணக்காய்வாளர்களுக்கான ஊதியத்தை நிர்ணயிப்பதற்காகப் பணிப்பாளர்களுக்கு அங்கீகாரம் வழங்குவதைப் பரிந்துரைக்கும் கூட்டத்தீர்மானம் வருடாந்த பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

2019 மார்ச் 31ஆந் திகதியில் உள்ளவாறு, மீளாய்வாண்டிற்கான மொத்த கணக்காய்வுக் கட்டணங்களாக ரூபா 400,000.00 தொகை அரசாங்கக் கணக்காய்வாளர்களுக்கு கம்பனியால் வழங்கப்பட்டிருந்தன. வரி ஆலோசனை தொடர்பான சேவைகளுக்காக மெஸர்ஸ் அமரசேகர எண்ட் கம்பனிக்கு ரூபா 246,432.00 கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

தமது சுதந்திரத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் எவ்விதமான உறவு முறைகளையும் கணக்காய்வாளர்கள் நிறுவனத்துடன் அல்லது அதன் துணை நிறுவனங்களுடன் பேணியிருக்கவில்லை என்பதை பணிப்பாளர்கள் தமது அறிவுக்கெட்டிய வரை உறுதிப்படுத்துகின்றனர்.

பணிப்பாளர்கள் சபைக்காகவும் சார்பாகவும்

தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர்

நிறைவேற்றுப் பணிப்பாளர்

FINANCIAL SERVICES AND COMMERCIAL AGENCIES (PRIVATE) LIMITED
COMPANY SECRETARIES TO LANKA PHOSPHATE LIMITED

கம்பனிச் செயலாளர்கள்

## *கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை*

**அமைப்பு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இக்குழு சபைக்கு பொறுப்புடையதாகும். பொதுத் திறைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர், இக்குழுவின் தலைவராவார். வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட்டின் அனைத்து நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களும் குழுவின் அங்கத்தவர்களாக செயற்படுகின்றனர். கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஓர் உத்தியோகத்தரும் இணை அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரும் இக்குழுவில் அவதானிப்பாளர்களாகச் செயற்படுகின்றனர்.

**கூட்டங்கள்**

குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகளைக் கலந்தாலோசிப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2018/19ஆம் ஆண்டில் இரண்டு தடவைகள் கூடியது. இவ்வாண்டின் போது பிரதானமாக உள்ளகக் கணக்காள்வளரின் இராஜினாமா மற்றும் பணிப்பாளர் சபையின் மாற்றங்கள் காரணமாக நுட்டங்கள் இரண்டிற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டியேற்பட்டது. நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளும் தற்போது காணப்படுகின்ற கட்டுப்பாட்டு முறைமைகளும் பணிப்பாளர் சபைக்கு விதந்துரைகள் மேற்கொள்ளப்படுவதற்காகக் குழுவால் மீளாய்வு செய்து மதிப்பிடப்பட்டன.

**முடிவுரை**

அறிக்கைகளை விரிவாக ஆராய்ந்ததன் பின்னர், கம்பனியின் கணக்கியல் கொள்கைகள், செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக முகாமைத்துவத்திற்கு இக்குழு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. மேலும், சில சிக்கலான விடயங்கள் பணிப்பாளர் சபையின் கவனத்திற்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும் அனுப்பப்பட்டுள்ளன.

கையொப்பமிடப்பட்டது:

தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு
லங்கா பொஸ்பேட் லிமிடட்

IMU/A/LPL/06/19 23 செப்தெம்பர் 2019

தலைவர்

இலங்கை பொஸ்பேட் லிமிடட்

**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் 2019 மார்ச் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் மீது 2018இன் தேசிய கணக்காய்வுச் சட்ட இல 19இன் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் (“கம்பனி”) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2019 மார்ச் 31இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று உள்ளடங்கலாக மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன 2018இன் தேசிய கணக்காய்வுச் சட்ட இல 19இன் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது அறிக்கையினை பாராளுமன்றத்திற்கு காலக் கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2019 மார்ச் 31இல் உள்ளவாறான நிதிநிலைமையினதும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினதும் காசுப்பாய்ச்சலினதும் உண்மையானதும் நியாயமானதுமான விடயங்களை இத்துடனான நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுடன் (SLAuSs) இணங்கும் பிரகாரம் நான் எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் பிரிவிற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகளில் அந்நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள் குறித்து

மேலும் விபரித்துள்ளேன். எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு நான் பெற்றுக் கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானவையும் எனவும் நான் நம்புகின்றேன்.

### 1.3 முகாமையினதும் நிதிக் கூற்றுக்களுக்கான அதிகாரம் சாட்டப்பட்டவர்களினதும் பொறுப்புக்கள்

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கண்ணோட்டத்தினைக் கொடுக்கக்கூடிய நிதிக் கூற்றுக்களைத் தயார்படுத்துதல் மற்றும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களின் தயாரித்தலை இயலுமாக்குவதற்கு அவசியம் என முகாமைத் தீர்மானிக்கும் உள்ளகக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொடர்ந்து நிலைத்தல், வெளிப்படுத்தல், நிலைத்து நிற்றலிற்கு தொடர்பிலான பொருத்தமான விடயங்கள், கம்பனியைக் கலைப்பதற்கு அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு முகாமை எண்ணினாலோ அல்லது அவ்வாறு செய்வது அன்றி யதார்த்தமான மாற்றீடு இல்லை என்றாலோ கணக்கீட்டின் அடிப்படையில் நிலைத்து நிற்றலைப் பயன்படுத்தல் ஆகிய கம்பனியின் இயலுமையை மதிப்பீடு செய்தல் முகாமையின் பொறுப்பாகும்.

அதிகாரம் சாட்டப்பட்டவர்கள் கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்புடையவராவர்.

2018இன் தேசிய கணக்காய்வு சட்ட இல 19இன் 16(1) பிரிவின் பிரகாரம், கம்பனியால் வருடாந்த மற்றும் அவ்வப்போது நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய எல்லா பதிவுகளையும் உரிய ஏடுகளையும் பேணுவதற்கு கம்பனி கடப்பாடுடையது.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

முற்றுமுழுதும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுகளற்ற நிதிக் கூற்றுக்கள் என்பது குறித்து நியாயமான உறுதிப்பாட்டினைப் பெறுவதும் எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய கணக்காய்வளர் அறிக்கையினை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்பாடு என்பது ஓர் உயர் மட்ட உறுதிப்பாடாகும், ஆனால், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வொன்று பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படும் போது எப்போதும் அதனைக் கண்டுபிடிக்கும் என்பதற்கு உத்தரவதமல்ல. மோசடி அல்லது தவறு காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன்

தனிப்பட்ட ரீதியாக அல்லது மொத்தமாகவோ இந்நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் பயன்பாட்டாளர்களால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்கு நியாயமான ரீதியில் எதிர்பார்க்கப்படுவதால் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன.

இலங்கை கணக்காய்வு நியமங்களுடன் இணங்கும் ஒரு கணக்காய்வின் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்வாண்மைமிகு தீர்மானம் மற்றும் தொழில்வாண்மைமிகு ஐயப்பாடு ஆகியவற்றைச் செயற்படுத்துகின்றேன். மேலும் நான்:

- மோசடி அல்லது தவறு காரணமாகவா என பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் இடர்களை இனங்கண்டு மதிப்பிடுவதுடன், அவ் இடர்களுக்கு பதிலளிக்கக்கூடிய கணக்காய்வு வழிமுறைகளை வடிவமைத்து செயற்படுத்துகின்றேன், மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிபடையினை வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்கின்றேன். மோசடியானது கூட்டுச்சதி, போலிஆவணம், வேண்டுமென்றே தவிர்த்தல், திரித்துக்கூறல், அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை மீறுதல் கொண்டிருக்குமாகையால், மோசடியினால் விளையக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றொன்றினை கண்டறியாத ஆபத்து தவறினால் விளையக் கூடியதை விடக் கூடியதாகும்.
- கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் மீதான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்லாது, சந்தர்ப்பங்களின் போது பொருந்தக்கூடிய கணக்காய்வு வழிமுறைகளை வடிவமைப்பதற்கு கணக்காய்விற்கு தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாட்டின் புரிதலைப் பெறுகின்றேன்.
- முகாமையினால் மேற்கொள்ளப்பட்ட சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடகளின் நியாயத்தன்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டினை மதிப்பாய்வு செய்கிறேன்.
- பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையில் தொடர்ந்து செல்லலாக கம்பனியின் தொடர்ந்து செல்லும் ஆற்றல் மீது குறிப்பிடத்தக்களவில் சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பதையும் மற்றும் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லல் அடிப்படை மீதான முகாமையின் பாவனையின் பொருத்தப்பாட்டினையும் தீர்மானிக்கின்றேன். பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் தீர்மானிப்பின், நிதிக் கூற்றுக்களில் உள்ள சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்களுக்கும் அல்லது அவ்வாறான

வெளிப்படுத்தல்கள் போதாதாயின் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கும் நான் எனது கணக்காய்வாளர் அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியவனாவேன். எனது முடிவுகள் எனது கணக்காய்வாளர் அறிக்கைத் திகதி வரையில் பெற்றுக் கொண்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்து செல்லலை தொடர்வதற்கு கம்பனியை நிறுத்துவதற்கு ஏதுவாகக்கூடும்.

- நியாயமான முன்வைத்தலை அடையும் விதத்தில் அடிப்படை கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிபலிக்கின்றனவா எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைத்தல், அமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்கின்றேன்.

என்னுடைய கணக்காய்வின் போது நான் இனங்கண்ட உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் ஆகிய ஏனைய விடயங்கள் குறித்து அதிகாரமளிக்கப்பட்டவர்களுடன் தொடர்பாடல் மேற்கொள்கின்றேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைகள் மீதான அறிக்கை

2018இன் தேசிய கணக்காய்வு சட்ட இல 19 மற்றும் 2007இன் கம்பனிகள் சட்ட இல 7 என்பன பின்வரும் தேவைகளுக்கு குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

- கணக்காய்வு நோக்கத்திற்காக அவசியம் எனக் கருதப்படும் எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசீலினையின் பிரகாரம், 2007இன் கம்பனிகள் சட்ட இல 7இன் 163(1) (ஈ) பிரிவின் மற்றும் 2018இன் தேசிய கணக்காய்வு சட்ட இல 19இன் 12(அ) பிரிவின் தேவைப்பாட்டிற்கு இணங்க கம்பனியால் உரிய கணக்கீட்டுப் பதிவுகள் வைக்கப்பட்டுள்ளன.
- கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2007இன் கம்பனிகள் சட்ட இல 7இன் 151ஆவது பிரிவின் தேவைப்பாட்டுடன் இணங்குகின்றன.
- 2018இன் தேசிய கணக்காய்வு சட்ட இல 19இன் 6(1)(ஈ)(*iii*) பிரிவின் தேவைப்பாட்டின் பிரகாரம் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டுடன் ஒத்துப் போகின்றன.
- 2018இன் தேசிய கணக்காய்வு சட்ட இல 19இன் 6(1)(ஈ)(iv) பிரிவின் தேவைப்பாட்டின் பிரகாரம் கடந்த ஆண்டில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் பொருண்மை சார்ந்த விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பெறப்பட்ட ஆதாரங்கள் அடிப்படையில்,

2018இன் தேசிய கணக்காய்வு சட்ட இல 19இன் 12(ஈ) பிரிவின் தேவைப்பாட்டின் பிரகாரம் வர்த்தகத்தின் சாதாரண காரணத்திற்கு அப்பால், கம்பனியின் ஆளுகைக் குழுவின் யாராயினும் உறுப்பினர் ஒருவருக்கு கம்பனியினால் கைச்சாத்திடப்பட்ட யாதாயினும் ஒப்பந்தத்தில் நேரடியாகவோ அல்லது முறைமுகமாகவோ விருப்பேதும் கொண்டிருப்பதைக் குறிப்பிடுவதற்கு

- 2018இன் தேசிய கணக்காய்வுச் சட்ட இல 19இன் 12(ஊ) பிரிவின் தேவைப்பாட்டின் பிரகாரம் கம்பனியின் ஆளுகைக் குழுவினால் வெளியிடப்பட்ட யாதாயினும் பொருந்தக்கூடிய எழுத்துமூல சட்டம், பொது மற்றும் விசேட நிபந்தனைகளுடன் கம்பனி இணங்கியிருக்கவில்லை எனக் குறிப்பிடுவதற்கு இவை தவிர

| சட்டங்கள்/ நிபந்தனைகளுக்கு உசாவுகை | விபரம் |
|---|---|
| i. 2003 யூன் 02இன் பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல.12 இன் 6.5.1 பந்தி | 1 1/2 மாத கால தாமதத்துடன் 2019 யூலை 15ஆந் திகதி நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. |
| ii. நிதிப் பிரமாணங்கள் 772 மற்றும் 773 | 2016 ஏப்பிரல் 01 முதல் 2019 மார்ச் 31ஆந் திகதி வரை இனங்காணப்பட்ட வழக்கற்று பொன பொருட்பதிவேட்டு உருப்படிகளின் கிரயம் 3,808,331 ரூபாவாக இருந்தது. எனினும், இவ்வறிக்கைத் திகதி வரையிலும் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

- 2018இன் தேசிய கணக்காய்வுச் சட்ட இல 19இன் 12(எ) பிரிவின் தேவைப்பாட்டின் பிரகாரம் கம்பனி அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள், கடமைகள் ஆகியவற்றிற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிடுவதற்கு

- 2018இன் தேசிய கணக்காய்வுச் சட்ட இல 19இன் 12(ஏ) பிரிவின் தேவைப்பாட்டின் பிரகாரம் பொருந்தக்கூடிய சட்டங்களுடன் இணங்குவதாக காலச் சட்டகத்தினுள் சிக்கனமாக, வினைத்திறன்மிக்கதாக, விளைபயன்மிக்கதாக கம்பனியின் வளங்கள் கொள்வனவு செய்யப்பட்டும் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை எனக் குறிப்பிடுவதற்கு இவை தவிர;

  (அ) அதிகரித்துவரும் உரக் கேள்வியினைப் பூர்த்திசெய்வதற்கும் உரங்களை இறக்குமதி செய்வதைக் குறைப்பதற்கும் 2016 ஆகஸ்ட் மாதத்தில் 34,654,178 ரூபா கிரயத்தில் புதியதொரு கிரஷர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. இயந்திரத்தின் ஒரு மணித்தியாலத்திற்கான சராசரி உற்பத்தி 40 மெற்றிக் தொன்களாகும். எனினும், அவ்வாறான இயந்திரத்தின் கொள்ளளவு திருப்திகரமான முறையில் பயன்படுத்தவில்லை என்பதுடன், அவ்வியந்திரத்தின் மொத்த 103 வேலை நாட்களுக்குள் 15,337 மெ.தொ. உரம் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

  (ஆ) 2014ஆம் ஆண்டில் 11,513,434 ரூபா கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட புதிய ஆலை இயந்திரத்திற்கான உதிரிப் பாகங்கள் எவ்வித நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளன.

  எதுவும் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை.

ஆர்.எம்.ஜே. ரத்நாயக்கா

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

**வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனம**
**2019 மார்ச் 31 இல் முடிவடைந்த**
**ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று**

| | குறிப்பு | *2019 மார்ச் 31* | *2018 மார்ச் 31 (மீள் கூறப்பட்ட)* | **வேறுபாடு** |
|---|---|---|---|---|
| வருமானம் | **17** | 530,974,642 | 493,551,238 | 37,423,405 |
| விற்பனைக் கிரயம் | **18** | (341,893,724) | (315,948,330) | (25,945,394) |
| **மொத்த இலாபம்** | | **189,080,918** | **177,602,908** | **11,478,011** |
| தொழிற்சாலை மற்றும் நிர்வாக மேந்தலைகள் | **19** | (189,960,227) | (186,889,976) | (3,070,251) |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | **20** | (3,940,926) | (3,560,858) | (380,068) |
| நிதிச் செலவு | **21** | (476,976) | (1,594,578) | 1,117,603 |
| செயற்பாட்டிலிருந்து இலாபம் | | **(5,297,211)** | **(14,442,505)** | **9,145,294** |
| ஏனைய வருமானம் | **22** | 33,960,461 | 31,036,324 | 2,924,137 |
| **வரிவிதிப்பின் முன்னரான இலாபம்** | | **28,663,251** | **16,593,820** | **12,069,431** |
| வரிக்கு முன்னைய இலாபம் | **23** | 3,691,204 | (13,373,636) | 17,064,840 |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **32,354,455** | **3,220,183** | **29,134,271** |
| **ஏனைய விபரமான வருமானம்** | | | | |
| PPE இன் மீளமதிப்பீடு மீதான ஆதாயம் | | 109,916,265 | - | 109,916,265 |
| PPE இன் மீள்மதிப்பீடு மீதான பிற்போடப்பட்ட வரி | | (30,776,554) | | (30,776,554) |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் மீதான காப்பீட்டு இழப்பு | | (1,768,451) | (7,695,396) | 5,926,945 |
| **ஆண்டிற்கான மொத்த ஏனைய விபரமான வருமானம்** | | 77,371,260 | (7,695,396) | 85,066,656 |
| **ஆண்டிற்கான மொத்த விபரமான வருமானம்** | | **109,725,714** | **(4,475,213)** | **114,200,927** |
| **தலா ஒரு பங்கிற்கான ஈட்டல்கள் (ரூபா)** | **24** | **4.46** | **0.44** | **4.02** |

**வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனம**

**2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி**

| | | | | |
|---|---|---|---|---|
| | | *இலங்கை ரூபாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.* | | |
| | | **2019 மார்ச் 31 இல்** | **2018 மார்ச் 31 இல்** | ***Varience*** |
| | குறிப்பு | | *(மீள் கூறப்பட்ட)* | |
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஆதனம், பொறி, உபகரணம் | **5** | 369,490,485 | 295,044,771 | 74,445,714 |
| உரிமையாண்மை முதலீடுகள்(GSMB ரெக். சர்விசஸ் (பி | **6** | 1,000,000 | 1,000,000 | - |
| பிற்போடப்பட்ட வரி | | - | - | - |
| | | **370,490,485** | **296,044,771** | **74,445,714** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| இருப்புக்கள் | **7** | 105,136,724 | 107,773,553 | (2,636,829) |
| வியாபார பெறுகைகள் | **8** | 35,197,674 | 19,218,334 | 15,979,340 |
| வைப்புகள், முற்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய | **9** | 63,184,147 | 63,966,392 | (782,245) |
| நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி முறிகள் | **10** | 270,119,792 | 236,738,858 | 33,380,933 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | **11** | 47,508,725 | 33,830,528 | 13,678,197 |
| | | **521,147,062** | **461,527,665** | **59,619,397** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **891,637,547** | **757,572,436** | **134,065,110** |
| **உரிமையாண்மையும் பொறுப்புகளும்** | | | | |
| **மூலதனமும் ஒதுக்குகளும்** | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | **12** | 72,510,000 | 72,510,000 | - |
| மீள்மதிப்பட்டு ஒதுக்குகள் | | 79,139,711 | - | 79,139,711 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | | 622,909,862 | 597,323,858 | 25,586,004 |
| **மொத்த உரிமையாண்மை** | | **774,559,572** | **669,833,858** | **104,725,714** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | **13** | 40,070,517 | 37,066,377 | 3,004,140 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | **14** | 36,133,599 | 9,048,249 | 27,085,350 |
| | | **76,204,116** | **46,114,626** | **30,089,490** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| வியாபாரச் செலுத்த வேண்டியவைகள் | | 9,860,871 | 11,393,569 | (1,532,698) |
| செலுத்த வேண்டிய வருமான வரி | **15** | 863,131 | 4,875,373 | (4,012,242) |
| ஏனைய செலுத்த வேண்டியவை மற்றும் சேர் | **16** | 30,149,856 | 25,355,010 | 4,794,846 |
| வங்கி மேலதிகப்பற்றுகள் | | - | - | - |
| | | **40,873,858** | **41,623,952** | **(750,094)** |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புகளும்** | | **891,637,547** | **757,572,436** | **134,065,111** |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நான் உறுதிப்படுத்துகின்றேன்.

**நிதி முகாமையாளர்** **பொது முகாமையாளர்**

பக்கம் 15 முதல் 23 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகளும் பக்கம் 5 முதல் 14 வரையிலான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்களின் ஓர் உள்ளார்ந்த பகுதியாகும்.

இந் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பிப்பதற்குமான பொறுப்பு பணிப்பாளர் சபையினதாகும்.

**இந்நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் அவர்கள் சார்பாக**

| | |
|---|---|
| **தலைவர்** | **நிறைவேற்றுப் பணிப்பாளர்** |
| **2019 யூலை 11** | **2019 யூலை 11** |
| **கொழும்பு** | **கொழும்பு** |

**வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனம்**

**2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றக்கூற்று**

*இலங்கை ரூபாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

| | கூறப்பட்ட மூலதனம | மீள்மதிப்பட்டு ஒதுக்குகள் | நிறுத்தி வைத்த வருவாய்கள் (மீள் கூறப்பட்ட) | மொத்தம் |
|---|---|---|---|---|
| **2017 ஏப்பிரல் 01இல் இல் உள்ளவாறான மீதி (முன்னர் அறிவிக்கப்பட்ட)** | **72,510,000** | - | **668,227,563** | **740,737,563** |
| சீராக்கல் - பணிக்குழாத்தினர் கடன்கள் (குறிப்பு -25) | - | - | (63,428,492) | (63,428,492) |
| **2017 ஏப்பிரல் 01இல் இல் உள்ளவாறான மீதி (மீள் கூறப்பட்ட)** | **72,510,000** | **-** | **604,799,071** | **677,309,071** |
| ஆண்டிற்கான இலாபம் (மீள் கூறப்பட்ட) | - | - | 3,220,183 | 3,220,183 |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் மீதான காப்பீட்டு இழப்பு | - | - | (7,695,396) | (7,695,396) |
| ஆண்டிற்குள் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | - | - | (3,000,000) | (3,000,000) |
| **2018 மார்ச் 31இல் இல் உள்ளவாறான மீதி** | **72,510,000** | **-** | **597,323,858** | **669,833,858** |
| **2018 ஏப்பிரல் 01இல் இல் உள்ளவாறான மீதி** | **72,510,000** | - | **597,323,858** | **669,833,858** |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | 32,354,455 | 32,354,455 |
| PPE இன் மீளமதிப்பீட்டில் எழும் ஆதாயும் -(குறிப்பு 26) | | 109,916,265 | - | 109,916,265 |
| PPE இன் மீளமதிப்பீடு மீதான பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | | (30,776,554) | | (30,776,554) |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் மீதான காப்பீட்டு இழப்பு | - | - | (1,768,451) | (1,768,451) |
| காலப்பகுதியினுள் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | - | - | (5,000,000) | (5,000,000) |
| **2019 மார்ச் 31இல் இல் உள்ளவாறான மீதி** | **72,510,000** | **79,139,711** | **622,909,862** | **774,559,572** |

பக்கம் 15 முதல் 23 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகளும் பக்கம் 5 முதல் 14 வரையிலான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்களின் ஓர் உள்ளார்ந்த பகுதியாகும்.

## வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனம்
## 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சற் கூற்று

| | (இலங்கை ரூபாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.) | |
|---|---|---|
| | 2019.03.31இல் உள்ளவாறு | 201803.31இல் உள்ளவாறு |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 28,663,251 | 38,679,281 |
| | | |
| **சீராக்கல்கள்,** | | |
| பெறுமானத் தேய்வு | 40,387,668 | 33,660,940 |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | 6,668,795 | 5,791,136 |
| நிலையான சொத்துக்கள் அகற்றுகை | - | - |
| அகற்றப்பட்ட சொத்துக்கள் மீதான இலாபம் | - | - |
| வட்டி வருமானம் | (31,570,392) | (50,950,768) |
| பங்கிலாப வருமானம் | (1,000,000) | (800,000) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **43,149,321** | **26,380,589** |
| | | |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| இருப்புக்கள் | 2,636,829 | 9,381,588 |
| வியாபார பெறுகைகள் | (15,979,340) | 17,402,480 |
| வைப்புகள், முற்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பெறுகைகள் | 782,245 | (34,404,537) |
| வியாபார செலுத்த வேண்டியவைகள் | (1,532,698) | (2,454,903) |
| ஏனைய செலுத்த வேண்டியவை மற்றும் சேர் செலவினங்கள் | 4,794,846 | (19,018,539) |
| தேய்மானத்திற்கான ஏற்பாடு | 2,302,687 | 2,302,687 |
| **செயற்பாடுகளில் (பயன்படுத்திய)/இருந்து உருவான காசுப்பாய்ச்சல்** | **36,153,889** | **(410,635)** |
| | | |
| செலுத்திய வருமான வரி/ESC/WHT | (4,012,242) | (5,386,187) |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | | - |
| ஓய்வூதிய நலக் கடப்பாடுகளின் கொடுப்பனவு | (5,433,106) | (7,637,671) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்திய)/இருந்து தேறிய காசுப்பாய்ச்ச** | **26,708,541** | **(13,434,493)** |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (7,146,545) | (2,718,545) |
| அகற்றப்பட்ட சொத்துக்களிலிருந்து பண வருமானம் | - | - |
| காப்புறுதி கோரல்களிலிருந்து பண வருமானம் | - | - |
| முடிவுறா மூலதன வேலை | (73,258) | - |
| பெற்ற வட்டி | 31,570,392 | 50,950,768 |
| குறுங்கால வைப்புகளிலான அதிகரிப்பு | (33,380,933) | (20,182,966) |
| பெற்ற பங்கிலாபம் | 1,000,000 | 800,000 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப்பாய்ச்சல்** | **(8,030,344)** | **28,849,257** |
| | | |
| **நிதியிடல் நடவடிக்கைகள் மூலம் காசுப் பாய்ச்சல்கள்** | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | (5,000,000) | (3,000,000) |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய காசுப்பாய்ச்சல்** | **(5,000,000)** | **(3,000,000)** |
| | | |
| **ஆண்டினுள் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் தேறிய மாற்றங்கள்** | **13,678,197** | **12,414,764** |
| | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 33,830,528 | 21,415,764 |
| | | |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் (குறிப்பு 8)** | **47,508,725** | **33,830,528** |
| | | |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளைப் பிரதிநிதிப்படுத்து** | **2019 மார்ச் 31** | **2018 மார்ச் 31** |
| நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்கள் | - | - |
| கையில் மற்றும் வங்கியில் உள்ள காசு | 47,508,725 | 33,830,528 |
| | - | - |
| | **47,508,725** | **33,830,528** |

## 1. தாபனத் தகவல்கள்

### 1.1 அமைவிடம் மற்றும் சட்ட அமைப்பு

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் ("கம்பனி") அரச சுரங்க மற்றும் கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல பொஸ்பேட் செயற்றிட்டத்தைப் பொறுப்பேற்பதற்காக 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் நியதிகளுக்கு அமைய பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 73/1/1புதிய களனி பாலம் வீதி, கொழும்பு-14 என்ற முகவரியில் அமைந்துள்ளதுடன் ரொக் பொஸ்பேட் (Apatite) படிவு எப்பாவலயில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

நீண்ட கால விவசாயப் பயிரினங்களின் பசளையாக பயன்படுத்தக் கூடிய பாறைப் பொஸ்பேட்களை அகழ்தல், பதனிடல், விற்பனை செய்தல் என்பன கம்பனியின் பிரதான நடவடிக்கைகளாகும். இதற்கு மேலதிகமாக, கம்பனி 2014 இல் வாரியபொல, கனத்தேவெவவில் உரங்களின் கலப்புச் செயற்பாட்டையும் ஆரம்பித்திருந்தது.

### 1.3 அறிக்கையிடும் காலம்

நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்கப்படும் காலப்பகுதி 2018.04.01 முதல் 2019.03.31ஆந் திகதி வரையிலாகும்

### 1.4 வெளியிடுவதற்கு அதிகாரம் பெற்ற திகதி

2019 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் வரைவினை பணிப்பாளர் சபை கணக்காய்வாளர்களுக்கு 2019 யூலை 11ஆம் திகதி வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

## 2. தயாரிப்பிற்கான அடிப்படை

### 2.1 இணக்கக் கூற்று

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளிற்கு இணங்கவும் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட (LKASs மற்றும் SLFRSs) இலங்கைக் கணக்கீட்டு நியமங்களிற்கு அமைய (நிதிநிலைமைக் கூற்று,

விபரமான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகளுடன்) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 2.2 அளவீட்டின் அடிப்படை

நிதிநிலைமைக் கூற்றில் பின்வரும் முக்கிய விடயங்கள் தவிர நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:

— விற்பனைக்கென காணப்படும் நிதிச்சொத்துக்கள் அவற்றின் நியாய விலையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

- குறித்துரைக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் பொறுப்பு, குறித்துரைக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

- கம்பனிக்கு வருமானத்தை ஈட்டித்தரும் பொஸ்பேட் படிவு சொத்துக்களின் பெறுமதி நம்பகரமான முறையில் அளவிடப்பட முடியாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஒரு சொத்தாக ஏற்பிசைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

நிதிக்கூற்றுக்கள், கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்டிருந்தால் அன்றி சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து நிதித்தகவல்களும் கிட்டிய ரூபாவிற்கு முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல் - கடந்த நிதியாண்டின் LKAS 01 இற்கு அமைய கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாக கம்பனியால் பின்பற்றப்பட்டுள்ளன.

## 2.5 பொருண்மை மற்றும் திரள்வு

நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல் மீதான LKAS 01 இற்கு இணங்க, ஒரே தன்மையினதான ஒவ்வொரு மூலப்பொருள் வகையும் தனித்தனியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒத்த தன்மையற்ற அல்லது தொழிற்பாடற்ற விடயங்களும் அவை மூலப்பொருளாயின் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டரீதியான அங்கீகாரம் காணப்படுகின்ற வேளையிலும் தேறிய அடிப்படையில் தீர்க்கப்படுவதற்கு அல்லது சொத்துக்களை விற்பனை செய்து உடனடியாகவே பொறுப்பைத் தீர்ப்பதற்கான நோக்கம் இருப்பினும் மாத்திரமே நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் ஒன்றிலிருந்து மற்றொன்று கழிக்கப்பட்டு தேறிய பெறுமதிகள் நிதிநிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளன. ஏதெனும் கணக்கீட்டு நியமங்கள் அல்லது விதப்புரைகள் மூலம் தேவைப்பட்டால் அல்லது அனுமதித்தால் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தால் அன்றி வருமானங்களும் செலவினங்களும் விபரமான வருமானக்கூற்றில் ஒன்றிலிருந்து ஒன்று கழிக்கப்படுவதில்லை.

## 3. முக்கியமான கணக்கியல் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் எதிர்காலம் தொடர்பான சில குறிப்பிடத்தக்க சிக்கல்மிகு கணக்கீட்டு ஊகங்களின் பிரயோகம் தேவைப்படுகின்றது. மேலும், அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியில் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகளின் வெளிப்பாடுகளின் தாக்கங்கள் குறித்து தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை கம்பனியின் முகாமைத்துவம் மேற்கொள்வதற்கு வேண்டப்படுகின்றது. எனினும் இத்தகைய மதிப்பீடுகள், ஊகங்கள் என்பவை குறித்த நிலையற்ற தன்மை எதிர்காலச் சொத்துக்கள், பொறுப்புக்களின் கொண்டு செல்லல் தொகைக்கான ஓர் பொருண்மையான சீராக்கத் தேவைப்பாட்டை விளைவிக்கக் கூடியது. எனவே, உண்மையான அனுபவமும் விளைவுகளும் தீர்வுகளில் இருந்தும் மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடக்கூடும்.

கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் நடைமுறையில் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பின்வரும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை முகாமைத்துவம் மேற்கொண்டிருந்தது.

### (அ) வரிவிதிப்பு

கம்பனி, வருமான வரி மற்றும் ஏனைய வரிகளுக்கு உட்பட்டது. வரி விதித்தல் நோக்கத்திற்கான வரிக்குட்பட்ட இலாபம் மற்றும் நிதிக்கூற்றுக்களில் SLFRS இன் கையாள்கையின் காரணமாக வரி வழிகாட்டல்களின் சிக்கலைக் கொண்ட நடைமுறை, பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரிகளிற்கான மொத்த ஏற்பாட்டை நிர்ணயிப்பதற்காக முக்கியமான தீர்மானங்கள் தேவைப்பட்டன.

இந்நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பின் போது வரிச்சட்டங்களின் பிரயோகங்களின் விளக்கங்களில் நிச்சயமற்ற தன்மைகள் நிலவின.

மேலதிக வரிகளின் நிலுவைகளின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டே நடைமுறை, பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை கம்பனி ஏற்பிசைவு செய்துள்ளது. ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட தொகைகளிலிருந்தும் இறுதி வரியின் விளைவு வேறுபடுகையில் அத்தகைய வேறுபாடுகள் நிர்ணயங்கள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியின் போதான வருமானம், பிற்போடப்பட்ட மற்றும் வரித் தொகைகளைப் பாதிககும்.

### (ஆ) ஆதனம் மற்றும் உபகரணங்களின் பயன்படு ஆயுட்காலம்

கம்பனி ஒவ்வொரு அறிக்கைத் திகதியில் உள்ளவாறான சொத்துக்களின் பெறுமானத்தேய்வின் இறுதி நிலைப்பெறுமதி, பயன்படு ஆயுட்காலம் மற்றும் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு முறைகளை மீளாய்வு செய்கின்றது. முகாமைத்துவத்தின் தீர்மானம் இப் பெறுமதியிடல்கள், வீதங்கள், முறைகளின் மதிப்பீட்டில் பிரயோகிக்கப்படுவதால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுகின்றன.

### இ) தொடர்ந்து இயங்கும் தன்மை

கம்பனி தொடர்ந்து இயங்கக்கூடிய தன்மையினை உறுதிப்படுத்தும் வகையில் பணிப்பாளர்கள் ஒரு மதிப்பீட்டை மேற்கொண்டு எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்காக வியாபாரத்தைத் தொடரக்கூடிய அளவிற்கு மூலவளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதாகத் திருப்திகொண்டுள்ளது. மேலும், கம்பனி தொடர்ந்து இயங்கும் திறனைப் பாதிக்கக்கூடிய முக்கியமான நிச்சயமற்ற தன்மைகள் பற்றி பணிப்பாளர்கள் சபை அறியாததுடன், அவர்களுக்குக் கம்பனியைக் கலைப்பதற்கான அல்லது அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கான நோக்கமும் இல்லை. ஆகவே நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் அடிப்படையில் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றன.

### (ஈ) ஐந்தொகைக்குப் பின்னைய நிகழ்வு

2019 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கம்பனியின் விளைவுகள் மீதான முக்கியமான பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய எவ்வித நிகழ்வும் ஐந்தொகைக்குப் பின்னர் நடைபெறவில்லை.

### (உ) நிதிசொத்துக்கள் மீதான சேத இழப்புக்கள்

விபரமான வருமானக்கூற்றில் சேத இழப்புகள் ஏதேனும் பதியப்பட வேண்டுமா என்பது குறித்து பொருண்மையான ஆதாரங்கள் ஏதேனும் உள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் அல்லது அடிக்கடி கம்பனி மதிப்பீடுகளை மேற்கொண்டு வருகின்றது.

### (ஊ) விற்பனைக்குத் தயாராக உள்ள முதலீடுகளின் பெறுமதியில் ஏற்பட்ட இழப்புகள்

விற்பனைக்கென வகைப்படுத்தப்பட்ட பங்கு அறக்கட்டளை முதலீட்டிற்காக வழங்கப்பட்ட கடன் பெறுமதியை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியின் போதும் அவை இழப்பிற்கு உள்ளாகியுள்ளனவா எனக் கம்பனி மதிப்பீடு செய்கின்றது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் தனியான மதிப்பீடுகளில் பிரயோகிக்கப்பட்ட அதே விதமான தீர்வுகளும் இதன் போது தேவைப்படுகின்றன.

### (எ) பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்

கழிக்கப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகள், வரி இழப்புகள் மற்றும் வரிக் கழிவுகள் பயன்படுத்தப்படாது இவ் இழப்புகள்/கழிவுகள் வரிக்குட்படக் கூடிய வருமானத்தின் அளவிற்கு பயன்படுத்தப்படக்கூடியதற்கு எதிராக பயன்படுத்தப்படுவதற்குள்ள வரையிலான வரி இழப்புகள் மற்றும் வரிக் கழிவுகளுக்காக உள்ளது. எதிர்கால வரித் திட்ட தந்திரோபாயங்களுடன் எதிர்கால வரிக்குட்படக்கூடிய இலாபங்களின் நேரத்தையும் நிலையையும் அடிப்படையாகக் கொண்டு ஏற்பிசைவு செய்யக்கூடிய பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் தொகை நிர்ணயிப்பதற்கு முக்கிய முகாமைத்துவத் தீர்வுகள் தேவைப்படுகின்றன.

### (ஏ) குறிக்கப்பட்ட நலன் திட்டங்கள்

காப்பீட்டு எடுகோல்களைக் கருத்திற்கொண்டு ஒரு சூத்திரத்தைப் பயன்படுத்தி விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டங்களின் கொண்டுசெல்லல் பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் உள்ளபடியான அபிவிருத்திகளில் இருந்து வேறுபடக் கூடிய பல்வேறு எடுகோல்களை இவை ஈடுபடுத்தி உள்ளன. இவை

கழிவு வீதம், எதிர்கால சம்பள உயர்வுகள் மற்றும் ஊழியப் புரள்வு வீதங்கள் போன்றவற்றை நிர்ணயிப்பினை உள்ளடக்கியுள்ளன. கணிப்பீட்டின் சிக்கல் நிலை, மறைவாக உள்ள எடுகோல்கள் மற்றும் அவற்றின் நீண்ட காலத் தன்மைகள் காரணமாக இவ் எடுகோல்களில் விதந்துரைக்கப்பட்ட நலன் கடப்பாடு மாற்றங்களுக்கு ஆளாகக்கூடியது. ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் சகல எடுகோல்களும் மீளாய்வு செய்யப்படுகின்றன.

விதந்துரைக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட கால அளவைப் பொருத்து மதிப்பீடுசெய்யப்பட்ட முதிர்வுகளுடன் இலங்கை அரச முறிகளின் விளைவை முகாமைத்துவம் கருத்திற்கொண்டு துல்லியமான கழிவு வீதம் கணிப்பிடப்படுகின்றது. மேலும், எதிர்கால சம்பள உயர்வுகள் கம்பனியின் எதிர்கால சம்பள உயர்வு வீதத்தை மற்றும் எதிர்கால பணவீக்க வீதத்தை அடிப்படையாகக் கொண்டன.

## 4. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

கம்பனியால் இந் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பயன்படுத்தப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பிடப்பட்டால் அன்றி தொடர்ந்து அனைத்துக் காலப் பகுதியின் போதும் இந்நிதிக் கூற்றுக்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

## 4.1 வருவாய் ஏற்பிசைவு

### 4.1.1 பொருட்களின் விற்பனை

வருவாயானது பொருளாதார நன்மைகள் கம்பனிக்கு கிடைக்கக்கூடியதாகக் காணப்படுகின்ற போதும் வருமானம் மற்றும் அவை தொடர்பான கிரயங்களும் நம்பகரமான அடிப்படையில் கணிப்பிடக்கூடியதாக உள்ள போதும் இனங்காணப்படுகின்றது. கிடைக்கப் பெற்ற அல்லது கிடைக்கக் கூடிய தேறிய வர்த்தகக் கழிவுகள் மற்றும் விற்பனை வரிகளைக் கருத்திற் கொண்டு நியாயமான பெறுமதியில் வருவாய் கணிக்கப்படுகின்றது.

பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்படும் சந்தர்ப்பங்களில் பொருட்களின் விற்பனை மூலம் பெறப்படும் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது:

அ) குறிப்பிடத்தக்க இடர்களையும் பொருட்கள் மீதான உரிமையின் வெகுமதிகளையும் கொள்வனவாளருக்கு கம்பனி மாற்றியுள்ளது.

ஆ) பொருட்கள் மீதான பொதுவான உரிமையில் தொடர்ச்சியான முகாமைத்துவ தலையீடு அல்லது விற்கப்பட்ட பொருட்கள் மீதான ஒரு பயனுறுதி வாய்ந்த கட்டுப்பாடு போன்ற எதனையும் கம்பனி கொண்டிருக்கவில்லை.

இ) வருமானத் தொகை நம்பகரமான முறையில் அளவிட முடிவதுடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பொருளாதார நன்மைகள் கம்பனிக்குக் கிடைக்கக்கூடியதாகக் காணப்படுகின்றது. அத்துடன்

ஈ) கொடுக்கல்வாங்கல் தொடர்பாக ஏற்பட்ட அல்லது ஏற்பட உள்ள கிரயங்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்பட முடியும்.

### 4.1.2 வட்டி வருமானம்

வட்டி வருமானம் EIR-செயற்றிறன் வட்டி விகித முறையைப் (Effective Interest Rate) பயன்படுத்தி ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

### 4.1.3 பங்கிலாப வருமானம்

கம்பனியால் பங்கிலாபம் பெறப்படுவதற்கு உரித்தான வேளை முதல் அட்டுறு அடிப்படையில் விபரமான வருமானக்கூற்றில் பங்கிலாப வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 4.1.4 ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

## 4.2 செலவு ஏற்பிசைவு

வருமானங்கள் மற்றும் அவற்றை ஈட்டுவதற்கான கிரயத்திற்கும் குறித்த பொருளின் வருமானத்தின் உழைப்பிற்கும் இடையிலான நேரடிப் பிணைப்பின் அடிப்படையில் விபரமான வருமானக்கூற்றில் செலவினங்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

வியாபாரத்தைத் தொடர்ந்து இயக்குவதற்கும் ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் பொறிகளின் வினைத்திறனான பராமரிப்பிற்காக ஏற்கப்படும் சகல செலவினங்களும் விபரமான வருமானக் கூற்றில் பதியப்பட்டுள்ளன.

கம்பனியின் செயற்பாட்டுகள் நியாயமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன எனும் அடிப்படையில் விபரமான வருமானக்கூற்றின் வெளிப்படுத்தல் நோக்கத்திற்காக ''செலவினங்களின் செயற்பாட்டு முறை'' பிரயோகிக்கப்பட்டுள்ளன.

வருமான வரிச் செலவினங்கள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. வருமான வரிச் செலவினங்கள் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

## 4.3 வரிவிதிப்பு

### 4.3.1 நடைமுறை வரிகள்

நடைமுறை ஆண்டில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்துவதற்கு அல்லது அறவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை மற்றும் முன்னைய ஆண்டுகளின் செலுத்தவேண்டிய வரி தொடர்பாக ஏதேனும் சீராக்கங்கள் இருப்பின் அவையும் நடைமுறை வரிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 4.3.2 பிற்போடப்பட்ட வரி

நிதி அறிக்கையிடல் நோக்கிற்காக சொத்துக்கள், பொறுப்புக்களாகக் கொண்டுசெல்லப்படும் தொகைக்கும் வரி விதித்தல் நோக்கங்களாக பயன்படுத்தப்படும் தொகைகளுக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளின் மீது பொறுப்புக்களை பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் கழிக்கப்படக்கூடிய வேறுபாடுகள் அனைத்திற்குமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. பயன்படுத்தப்படாத வரிக் கழிவுகளும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளின் முன் கொண்டு செல்லல்களும், அவற்றின் கழிக்கப்படக் கூடிய தற்காலிக வேறுபாடுகளிற்கு எதிராக கிடைக்கப்பெறும் வரிக்குட்படும் இலாபத்தின் அளவு வரை பயன்படுத்தப்பட முடியும்.

பயன்படுத்தப்படுவதற்குள்ள பிற்போடப்பட்ட வரிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது முழுதையும் அனுமதிப்பதற்கு போதிய வரிக்கு உட்படத்தக்க இலாபம் இல்லாத போது அது வரைக்கும் ஒவ்வொரு அறிக்கைத் திகதியின் போதும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகை மீளாய்வு செய்யப்பட்டு குறைக்கப்படுகின்றது. ஏற்பிசைவு செய்யப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு நிதி நிலைமைக் கூற்றுத் திகதியின் போதும் மீள மதிப்பிடப்பட்டு அறவிடப்படுவதற்குள்ள பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அனுமதிக்கும் எதிர்கால வரிக்கு உட்படக் கூடிய இலாபம் வரையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

அறிக்கையிடல் திகதியில் அமுலில் உள்ள அல்லது பின்னர் அமுலாக்கப்பட்ட வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் சொத்துக்கள் தேறப்படும் போதும் பொறுப்புகள் தீர்க்கப்பட்ட ஆண்டில் பிரயோகிக்கப்பட்ட வரி வீதத்தில் அளவிடப்படுகின்றன.

## 4.4 நிதியல்லாச் சொத்து

### 4.4.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

**ஏற்பிசைவு மற்றும் அளவீடு**

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS-16 ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணங்களிற்கமைய சொத்தின் கிரயம் நம்பகரமான முறையில் அளவிடப்பட்டு சொத்துக்களின் எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவகத்திற்குள் பாய்ச்சப்படும் வகையில் இருப்பின் ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் ஏற்பிசைவு செய்யப்படும். ஆரம்பத்தில் ஆதனங்களும் உபகரணங்களும் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

**கிரய மாதிரி**

ஆதனம் மற்றும் உபகரணங்கள் அவற்றின் நாளாந்த பராமரிப்பு செலவினங்கள் தவிர்ந்த திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட சேத இழப்பு பெறுமதி கழிக்கப்பட்டு கிரயத்தில் பதியப்பட்டுள்ளன. ஏற்பிசைவு நியதிகள் நிறைவேற்றப்படின், அக்கிரயம் எற்படும் போது, உபகரணத்தின் பகுதியை மாற்றுவதற்கான கிரயத்தை அத்தகைய கிரயம் உள்ளடக்குகின்றது.

**பின்தொடரும் செலவினம்**

வியாபாரத்தினை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் அல்லது வியாபாரத்தில் வருமானம் ஈட்டும் திறனை அதிகரிக்கும் நோக்கில் நிரந்தரமாக மேற்கொள்ளப்படுகின்ற சொத்துக் கொள்வனவு அபிவிருத்தி செய்தல் அல்லது முன்னேற்றும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பின்னைய செலவினங்கள் மூலதனச் செலவினங்களாகும். அவை சொத்தின் கொண்டு செல்லல் தொகையாகும். நாளாந்தம் ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பிற்காக மேற்கொள்ளப்படும் கிரயங்கள், அவை மேற்கொள்ளப்பட்டவையாக விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

**பெறுமானத்தேய்வு**

மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட் காலங்களிற்கு இடையே அவற்றின் இறுதிப் பெறுமதியில் ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் கிரயம் நேர்க்கோட்டு முறையைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டுக் கழித்துக் காட்டப்படுகின்றது. பெறுமானத்தேய்வானது உருப்படி பாவனைக்கு கிடைக்கப் பெறும் போது ஆரம்பமாகின்றது. காணி பெறுமானத் தேய்வடைவதில்லை. மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்வுகளின் வீதங்கள் பின்வருமாறு:

| **சொத்து வகைகள்** | **பெறுமானத் தேய்வு (%)** |
|---|---|
| கட்டிடம் | 4 |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் | 10 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 10 |
| மின்சார உபகரணங்கள் | 10 |
| நானாவித சொத்துக்கள் | 10 |
| மோட்டார் வாகனம் | 20 |
| அலுவலக உபகரணம் | 20 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 20 |
| கணினி வன்பொருளும் மென்பொருளும் | 20 |
| காணி அபிவிருத்தி | 05 |

ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி, அதன் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வு முறைகள் மீளாய்வு செய்யப்பட்டு

பொருத்தமாயின் சீராக்கப்படுகின்றன. யாதாயினும் சொத்துக்கள், தொழில்நுட்பத்தில் உள்ள மாற்றங்கள் அடிப்படையிலோ அல்லது வேறு காரணங்களாலோ குறிப்பிடத்தக்களவு பெறுமதி மாற்றமடையின் அவ்வுருப்படிகளின் (உதாரணம்: கையடக்கத் தொலைபேசிகள், கமராக்கள்) தன்மை மற்றும் பெறுமதியைப் பொருத்து, நியாயமான அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்படுதல் வேண்டும் அல்லது கம்பனியின் வருமானத்திற்கு எதிராக அறவிடப்படுதல் வேண்டும்.

5,000 ரூபாவிற்கு மேற்பட்ட மொத்த பெறுமதி கொண்ட சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களாக ஏற்பிசைவு செய்யப்படும். 5,000 ரூபாவிற்கு குறைந்த யாதாயினும் சொத்துக்கள் வருமானக் கூற்றிற்கு அறவிடப்படும். எதிர்கால அறுதிப்படுத்தல் நோக்கத்திற்காக உரிய திணைக்களத்தினால் பதிவொன்று பேணப்படும்.

**குறை ஏற்பிசைவு**

ஆதனம் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றின் எதிர்கால பொருளாதார பயன்கள் அல்லாத போது அல்லது விற்பனைக்கென வகைப்படுத்தப்படும் போது அவை குறை ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. சொத்துக்களின் குறை ஏற்பிசைவால் ஏற்படும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனை வருவாய்க்கும் அச்சொத்துக்களின் முன் கொண்டுவந்த பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு) சொத்து குறை ஏற்பிசைவு செய்யப்பட்ட ஆண்டின் விபரமான வருமானக்கூற்றில் ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் வெளிக்காட்டப்படும்.

### 4.4.2 நிதி அல்லாச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு

ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் சொத்தொன்றின் பெறுமதியில் வீழ்ச்சிகள் காணப்படுவதற்கான அறிகுறிகள் உள்ளனவா என கம்பனி மதிப்பிடுகின்றது. ஏதேனும் அறிகுறிகள் காணப்படின் அல்லது சொத்தொன்றிற்காக வருடாந்த பெறுமதி இழப்பிற்கு உரிய பரிசோதனை தேவைப்படுகையில் கம்பனி சொத்துக்களின் பெறவேண்டிய தொகையை மதிப்பிடுகின்றது.

## 4.5 செயற்பாட்டுக் குத்தகைகள்

குத்தகைக் காலத்தின் போது சொத்து தொடர்பாக பெருமளவில் சகல இடர்களும் உரிமையும் குத்தகைக் கொடுனரிடம் உள்ள போது அக் குத்தகை செயற்பாட்டுக் குத்தகை என வகைப்படுத்தப்படும். செயற்பாட்டுக் குத்தகைக் கொடுப்பனவுகள் அல்லது குத்தகையிடப்பட்ட சொத்து நுகரப்படுவதிலிருந்தான பொருளாதார நலன்களின்

காலத்திற்கமைய நேர்க்கோட்டு முறைக்கமைய செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

## 4.6 இருப்புக்கள்

இருப்புகள், கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதி ஆகியவற்றில் குறைவானதில் வெளிப்படுத்தப்படுகின்றன. உற்பத்திச் செலவை அடிப்படையாகக் கொண்டு நிறையிடற் சராசரி என்ற அடிப்படையில் கிரயம் நிர்ணயிக்கப்படுகின்றது. பொஸ்பேட் இருப்புக்களை மதிப்பிடும் போது பொஸ்பேட் சுரங்க கிரயத்திலிருந்து 40% பெறுமானத்தை ''துண்டாக்கப்பட்ட'' உற்பத்தி (பதனிடப்படாத) பொருட்டு ஒதுக்குதல் அத்துடன் எஞ்சிய 60% பெறுமானத்தை ''அரைக்கப்பட்ட''உற்பத்திக்காக (பதனிடப்பட்ட) ஒதுக்கப்படுவது வழமையாகும். தேறிய தேறத்தக்க பெறுமதி என்பது சாதாரண வியாபார நடவடிக்கையின் போது எதிர்பார்க்கப்படும் விற்பனை விலையிலிருந்து அவ்விற்பனையைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்படக்கூடிய செலவினத்தை நீக்க வருவதாகும். பயனற்ற, மந்தகதியில் நகரும், குறைபாடுள்ள இருப்புக்களின் பொருட்டு தேவையான இடத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.7 நிதிச்சொத்துக்கள் – ஏற்பிசைவும் அளவீடும்

### 4.7.1 ஆரம்ப கட்ட ஏற்பிசைவு

நிதிச்சொத்துக்கள் சார்பான கருவிகளின் ஒப்பந்த விதிகளுக்கு அமைய கம்பனி ஒரு கட்சியினராய் வருகின்ற திகதியில் அனைத்து நிதிச்சொத்துக்களும் முதலாவதாக ஏடுகளில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. இது "வழக்கமான வழிமுறைகளில் இடம் பெறும் வர்த்தகத்தை": சந்தைப் பகுதியில் பிரமாணங்கள் அல்லது சம்பிரதாயத்தால் பொதுவாக உருவாக்கப்பட்ட நேர வரையறைக்குள் சொத்துக்களின் விநியோகத் தேவைப்பாட்டுடனான நிதிச் சொத்துக்களின் விற்பனை அல்லது கொள்வனவை உள்ளடக்குகின்றது.

### 4.7.2 ஆரம்ப கட்ட அளவீடுகள்

ஆரம்ப ஏற்பிசைவின் போது நிதிக் கருவிகளின் வகைப்படுத்தல்கள் அவற்றைக் கொள்வனவு செய்யும் முகாமைத்துவ நோக்கிலும் வகைப்படுத்தலிலும் தங்கியுள்ளது. சகல நிதிக் கருவிகளும் இவற்றில் கொடுக்கல்வாங்கல் கிரயங்கள், இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புகளும்

பதியப்படும் சந்தர்ப்பம் தவிர்ந்த வேளையில் அவற்றின் நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றன.

### 4.7.3 பின்தொடரும் அளவீடுகள்

கம்பனி பின்னர் பெறுமதியல்லா நிதிச் சொத்துக்களை விற்பனைக்காக உள்ள நிதி சார்பான கருவிகள், முதிர்விற்காக உள்ள முதலீடுகள், கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியிலான நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தியுள்ளன.

### 4.7.4 நிதிச்சொத்துக்களை மீள்வகைப்படுத்தல்

குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் கம்பனி ஆரம்ப ஏற்பிசைவின் போது FVTPL முறையில் பதியப்படாத பெறுதியல்லா நிதிச் சொத்துக்களை மீள வகைப்படுத்தப்பட உள்ளன.

— விற்பனைக்கென காணப்படுகின்ற வகைகள் மற்றும் விற்பனைக்காக உள்ளவை, கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் அல்லது முதிர்விற்காக உள்ள வகைகள்.

— 'விற்பனைக்காக உள்ள' வகை மற்றும் 'கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள்', 'விற்பனைக்கென காணப்படுகின்ற வகை' அல்லது 'முதிர்விற்காக உள்ளவை' ஆகியவற்றில் புதிய கடன்கழிக்கப்பட்ட கிரயமாக ஆகக்கூடிய மீள்வகைப்படுத்தல்கள் அவை மீள் வகைப்படுத்தப்பட்ட திகதியில் உள்ள நியாயப் பெறுமதியில் பதியப்படுகின்றன. விற்பனைக்கென காணப்படுகின்ற வகையில் மீள் வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்திற்காக EIR முறையைப் பயன்படுத்தி அச் சொத்தின் ஏதேனும் முன்னைய இலாபங்கள் அல்லது நட்டங்கள் உரிமை மூலதனத்தில் ஏற்பிசைவு செய்யப்படின் முதலீட்டின் எஞ்சிய ஆயுட்காலத்திற்கு அவை கழிக்கப்படுகின்றன. புதிய கடன்கழிக்கப்பட்ட கிரயத்திற்கும் எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சலுக்கும் இடையிலான வேறுபாடுகள் ஏதேனும் இருப்பின் அவையும் EIR முறையைப் பயன்படுத்தி அச் சொத்தின் எஞ்சிய ஆயட்காலத்தினுள் கழிக்கப்படுகின்றன. இச்சொத்து, பின்னர் மதிப்பிழப்பாவதற்கு நிர்ணயிக்கப்படுமாயின் அது உரிமையாண்மையில் இருந்து வருமானக்கூற்றிற்கு மீள்சுழற்சி செய்யப்படுகின்றது.

— ''விற்பனைக்காக உள்ளவைகளி''லும், கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளின் வகையிலும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவை தொடர்பான

வரைவிலக்கணத்திற்கு உட்பட்டு கம்பனி அந் நிதிச் சொத்தை முதிர்வுக் காலம் வரையில் அல்லது எதிர்வுகூறத்தக்க எதிர்காலத்திற்கு தொடர்ந்து வைத்திருக்கும் நோக்கம் இருப்பின், ஒரு நிதிச் சொத்து மீள் வகைப்படுத்தப்பட்டு, காசுப் பெறுவனவுகளின் அறவீட்டிலான அதிகரிப்பின் காரணமாக எதிர்காலக் காசுப் பெறுவனவுகளின் மதிப்பீடுகளை கம்பனி பின்னர் அதிகரிக்குமாயின் அவ் அதிகரிப்பின் தாக்கம் மதிப்பீட்டு மாற்றத் திகதியிலிருந்து EIR இற்கான ஓர் சீராக்கமாக ஏற்பிசைவு செய்யப்படும். மீள் வகைப்படுத்தல் முகாமைத்துவத்தின் தேர்வில் இடம்பெற்று கருவிக்குக் கருவி என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

### 4.7.5 நிதிச்சொத்துக்களின் குறை ஏற்பிசைவு

ஒரு நிதிச்சொத்து (அல்லது பொருத்தமான வேளையில் நிதிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒரே நிதிச் சொத்துக் கம்பனியின் ஒரு பகுதி) பின்வரும் சந்தர்ப்பங்களின் போது குறை ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

— சொத்துக்கள் காலாவதியாகும் போது அவைகளில் இருந்தான காசுப்பாய்ச்சலை பெற்றுக்கொள்ளும் உரிமைகள்.

— கம்பனி இச்சொத்துக்களில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய காசுப்பாய்ச்சல் தொடர்பான உரிமையை அல்லது பொருண்மையான தாமதம் இன்றி முற்றாகவே பெற்றுக்கொள்ளப்பட்ட காசுப்பாய்ச்சல்களை செலுத்தும் ஒரு கடப்பாட்டை எதிர்வுகூறி மூன்றாம் நபருக்கு மாற்றுதல் மற்றும் ஒன்றில் :

- அனைத்து சொத்துக்கள் தொடர்பான இடர்கள் மற்றும் வெகுமதிகளை கம்பனி கணிசமாக மாற்றியுள்ளது அல்லது
- கம்பனி சொத்துக்கள் தொடர்பான அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமாக மாற்றாது சொத்துக்கள் தொடர்பான கட்டுப்பாட்டை மட்டும் மாற்றியுள்ளது.

சொத்துக்களின் கட்டுப்பாடுகளை மாற்றாது அல்லது சொத்துக்களின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் பொருண்மையாக வைத்துக்கொள்ளவோ அல்லது மாற்றாது அனுப்புவதன் மூலமான ஒழுங்கை ஏற்படுத்தி அல்லது ஒரு சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்கள் பெறப்படுவதற்கு அதன் உரிமையை கம்பனி மாற்றுகையில் கம்பனிக்கு இச்சொத்துக்களில் உள்ள ஈடுபாடுகள் வரையில் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. அச் சந்தர்ப்பத்தில், கம்பனி தொடர்பான பொறுப்பையும் கம்பனி ஏற்பிசைவு செய்கின்றது. மாற்றப்பட்ட சொத்தும் தொடர்புடைய பொறுப்பும் கம்பனி

கொண்டுள்ள உரிமைகளும் கடப்பாடுகளும் வெளிப்படுத்தப்படும் அடிப்படையில் அளவிடப்படுகின்றன. மாற்றப்பட்ட சொத்தின் மீதான பொறுப்பு சொத்தின் உண்மையான கொண்டுசெல்லல் தொகை மற்றும் மீளச் செலுத்துவதற்கு கம்பனிக்குத் தேவையான அதி உயர்ந்த பெறுமதி ஆகியவற்றில் குறைவானதில் அளவிடப்படுகின்றது.

### 4.7.6 இனங்காணல், அளவீடு மற்றும் பெறுமதி இழப்பு மதிப்பீடுகள்

ஓவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் கம்பனி, இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் கொண்டு செல்லப்படாத நிதிச்சொத்துக்கள் இழப்பு மதிப்பிடப்பட்டுள்ளனவா என்பதற்கான புறநிலை ஆதாரங்கள் உள்ளனவா என்பதை மதிப்பிடுகின்றது. சொத்து(கள்) இன் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் ஏற்படும் ஓர் இழப்புச் சம்பவத்திற்கான புறநிலைச்சான்று உள்ள போதும் இழப்புச் சம்பவம் நம்பகரமான முறையில் மதிப்பிடக்கூடிய போது சொத்து(கள்) இன் எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகையில் ஒரு நிதிச்சொத்தின் அல்லது நிதிச் சொத்துக் கம்பனியின் பெறுமதியில் இழப்பு ஏற்படுகின்றது.

கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் முதலீட்டுப் பிணைகள் சேகரிக்கப்பட முடியாதவை என நிர்ணயிக்கப்படுகையில் கம்பனி அவற்றைப் பதிவழிக்கின்றது.

### 4.8 காசு மற்றும் வங்கி மீதிகள்

கையிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள காசு என்பன காசு மற்றும் வங்கி மீதிகளாகக் குறிக்கப்படுகின்றன.

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக கையிலுள்ள காசு, வங்கி வைப்புக்கள் மற்றும் வங்கி மேலதிகப் பற்றுக்களின் தேறிய நிலுவைகள் என்பவற்றை காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் உள்ளடக்கியுள்ளன. குறுங்கால முதிர்வுகளுடனான முதலீடுகள் அதாவது கொள்வனவுத் திகதியில் இருந்து மூன்று மாதங்கள் அல்லது அதனிலும் குறைவானவையும் காசுக்குச் சமமானவையாகக் கருதப்பட்டுள்ளன.

### 4.9 கூறப்பட்ட மூலதனம்

சாதாரண பங்குகள் உரிமையாண்மையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. உரிமையாண்மைப் பத்திரங்கள், காசு அல்லது ஏனைய பெறப்பட்ட அல்லது பெற வேண்டிய மூலவளங்களின் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் உரிமையாண்மைப் பத்திர வழங்கலின் தேறிய நேர் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன.

## 4.10 ஓய்வூதிய நலக் கடப்பாடுகள்

### 4.10.1 குறிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் - பணிக்கொடை

தொடர்ச்சியாக 5 ஆண்டு கால சேவையைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான கடப்பாடு உருவாகின்றது என்ற அடிப்படையில் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்திற்கு இணங்க கம்பனி பணிக்கொடைக் கொடுப்பனவை மேற்கொள்ளப் பொறுப்புடையதாகும். இம்மதிப்பீடு காப்பீட்டு எடுகோள்களின் கீழ் காப்புறுதிப் பத்திர மதிப்பீட்டாளர் ஒருவரால் திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. எடுகோள்கள் மற்றும் முறைமைகளின் அடிப்படையில் பணியில் இருக்கும் ஊழியர்கள் தொடர்பிலான 2019 மார்ச் 31ஆந் திகதியில் உள்ளவாறான குறிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியானது 40,070,517.00 ரூபாவாகும். 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு சூத்திர முறையினைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்ட PVDBO 37,066,377.00 ரூபாவாகும். பொறுப்பு இலங்கை வங்கி, கிராண்டபாஸ் கிளையில் நிலையான வைப்பின் மூலம் வெளிவாரியாக நிதியிடப்படுகின்றது. வருட இறுதியின் போது நிலையான வைப்பின் பெறுமதியானது 57,423,515.48 ரூபாவாகும். ஒவ்வொரு வருட இறுதியிலும் நிர்ணயிக்கப்பட்ட பொறுப்பு அடிப்படையில் முதலீடு செய்யப்பட்ட தொகை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது.

### 4.10.2 குறிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

குறிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது ஊழியர்கள் தொழிலிலிருந்து விலகிய பின்னரான நலன் திட்டத்தின் கீழ் ஒரு நிறுவனம் நிலையான தொகை ஒன்றை வேறொரு நிறுவனத்திற்கு செலுத்துவதும் மற்றும் கூடுதலான தொகைளைச் செலுத்துவதற்கு ஆக்கபூர்வமான அல்லது சட்ட ரீதியான கடப்பாட்டினைக் கொள்ளாமையாகும். விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களிற்கான கடப்பாடுகள், ஊழியர்களால் சேவை மேற்கொள்ளப்படும் காலப்பகுதியிலான விபரமான வருமானக் கூற்றில் ஊழியர் நலன் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

#### அ. ஊழியர் சேமலாப நிதியம்

கம்பனியும் ஊழியர்களும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தில் இருந்து முறையே 12%ஐயும் 10% ஐயும் பங்களிப்பாகச் செலுத்துகின்றன.

### ஆ. ஊழியர் நம்பிக்கை நிதியம்

கம்பனி ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தில் இருந்தும் 3% பங்களிப்பைச் செலுத்துகின்றது.

## 4.11 நிதிப் பொறுப்புக்கள்

### 4.11.1 ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

நிதிப் பொறுப்புக்களின் விதப்புரைகள் மற்றும் ஒப்பந்த ரீதியான ஒழுங்குகளின் முதன்மைக்கு அமைய ஏனைய நிதிப் பொறுப்புகள் அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நிதிப் பொறுப்புகளை நியாயப் பெறுமதியில் (FVTPL) நிதிப் பொறுப்புகளாக கம்பனி வகைப்படுத்துகின்றது.

கம்பனி, நிதிப் பொறுப்புக்களின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளுக்கு ஓர் தரப்பாக உள்ளாகும் போது நிதிப் பொறுப்புகளை கம்பனி நிதி நிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்கின்றது.

### i. FVTPL இல் நிதிப்பொறுப்புக்கள்

ஆரம்ப ஏற்பிசைவின் போது நியமிக்கப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் அல்லது விற்பனை நோக்கில் பேணப்பட்டு வருகின்ற நிதிப்பொறுப்புக்கள் FVTPL இலான நிதிப்பொறுப்புக்களில் உள்ளடங்குகின்றன. ஆரம்ப ஏற்பிசைவுகளின் பின்னர் நிதிப் பொறுப்புக்கள் அவற்றின் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு அவற்றின் வேறுபாடுகள் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து, கொடுக்கல் வாங்கல் கிரயம் நேரடியாகக் கொள்வனவுடன் சேர்க்கப்பட்டு ஏற்கப்பட்டவையாக இலாபம் அல்லது நட்டமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. FVTPL இலான நிதிச் சொத்துக்களைப் போன்றே ஆரம்ப ஏற்பிசைவிற்கான FVTPL இலான நிதிப்பொறுப்புக்களின் நியதிகளும் ஒன்றேயாகும்.

### ii. ஏனைய நிதி பொறுப்புக்கள்

வைப்புக்கள், கம்பனியால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் ஏனைய நிதிப் பெறுவனவுகளை உள்ளடக்கிய ஏனைய நிதிப்பொறுப்புக்கள் ஆரம்பத்தில் நியாயமானப் பெறுமதியில் அளவிடப்பட்டு கொள்வனவிற்காக ஏற்கப்பட்ட கிரயம் கழிக்கப்பட்டு அதன் பின்னர் EIR முறையைப் பயன்படுத்தி இழப்புக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. இழப்புக் கிரயம் EIR இன் உள்ளார்ந்த ஓர் பகுதியைக் கொண்ட கிரயங்கள் மற்றும் வழங்கலிலான பங்கு வட்டம் அல்லது கழிவைக் கருத்திற் கொண்டு கணிப்பிடப்படுகின்றன.

## 4.11.2 நிதிப்பொறுப்புக்களின் குறை ஏற்பிசைவு

நிதிப்பொறுப்புக்கள் தொடர்பான பொறுப்புக்கள் காலாவதியாகும் போது அல்லது இரத்தாகும் போது இப்பொறுப்புக்கள் குறை ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. தற்போதுள்ள நிதிப் பொறுப்புகள் அதே வழங்குனரால் கணிசமாக வேறு நிபந்தனைகளுடன் பதிலீடு செய்யப்படுகையில் அல்லது தற்போதுள்ள பொறுப்புகள் கணிசமாக திருத்தப்பட்டிருப்பின் அத்தகைய பதிலீடு அல்லது திருத்தம் ஆரம்ப பொறுப்பு குறை ஏற்பிசைவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு ஒரு புதிய பொறுப்பாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஆரம்ப நிதிப்பொறுப்பின் கொண்டு செல்லல் பெறுமதிக்கும் செலுத்தப்பட்ட கைமாற்றிற்கும் இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

## 4.12 ஏற்பாடுகள்

கடந்த நிகழ்வின் விளைவாக நிகழ்காலத்தில் கம்பனியால் ஏதேனும் (சட்ட அல்லது ஆக்கபூர்வ) கடப்பாடுகள் காணப்படும் போது ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்பட்டு இக்கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக பொருளாதார நலன்களைக் கொண்ட வளங்களின் வெளிப்பாய்ச்சல்கள் தேவைப்படுவதுடன் நம்பகரமான மதிப்பீடு கடப்பாட்டின் தொகைக்காக மேற்கொள்ளப்பட வேண்டும். ஏற்பாடுகள் தொடர்பான செலவினங்கள் ஏதேனும் மீளளிப்புகளின் தேறலாக விபரமான வருமானக் கூற்றில் வெளிப்படுத்தப்படுகின்றது.

## 4.13 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று LKAS 7 இல் விதந்துரைக்கப்பட்டவாறு நேரில் முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கி மேலதிகப்பற்று என்பவற்றை காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் உள்ளடக்கியுள்ளன.

## 4.14 பிரிவுசார் விபரங்கள்

நிறுவனத்தின் ஒரு பிரிவு என்பது, சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள பிரத்தியேயகமான ஒரு கூறாகுவதுடன் ஏனைய பிரிவுகளில் இருந்து வேறுபடக்கூடிய இடர்களுக்கும் வருவாய்களுக்கும் உட்படக்கூடியது. கம்பனியின் அனைத்துச் செயற்பாடுகளும் ஒரு பகுதியாகக் கருதப்படுவதனால் ஒரு பிரிவாக இனங்காணக்கூடிய பிரத்தியேகமான பிரிவுகளைக் கம்பனி கொள்ளவில்லை.

## வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனம்

### 2019 மார்ச் 31 இல் முடிவுற்ற காலத்திற்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

*இலங்கை ரூபாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **5** | **ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்** | | | | |
| | **கிரயம்/ மீள்மதிப்பீடு** | **2018 ஏப்ரல் 01இல் உள்ளவாறான மீதி** | **சேர்ப்பனவு/ மீள்மதிப்பீடு** | **அகற்றுகை** | **2019 மார்ச் 31இல் உள்ளவாறான மீதி** |
| | கட்டிடங்கள் | 172,743,345.77 | 147,059,101 | (173,089,947) | 146,712,500 |
| | உள்ளக வீதிகள் | 65,139,730.22 | - | - | 65,139,730 |
| | பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் | 138,802,269.39 | 104,985,484 | (143,387,769) | 100,399,984 |
| | மோட்டார் வாகனங்கள் | 98,753,161.00 | 63,515,000 | (98,753,161) | 63,515,000 |
| | அலுவலக உபகரணம | 2,581,399.00 | 7,140,988 | (2,818,936) | 6,903,452 |
| | மின் உபகரணம் | 13,346,907.65 | 52,475 | (13,399,383) | - |
| | தளபாடங்களும் பொருத்திகளும் | 7,618,383.79 | 7,197,147 | (8,051,472) | 6,764,059 |
| | ஆய்வுகூட உபகரணம | 1,976,293.00 | 46,000 | (2,022,293) | - |
| | கணினி வன்பொருட்களும் மென்பொருட்களும் | 14,828,998.30 | 4,477,060 | (16,274,343) | 3,031,715 |
| | நானாவித சொத்துக்கள் | 11,283,522.01 | - | (11,283,522) | - |
| | | **527,074,010** | **334,473,255.18** | **(469,080,826)** | **392,466,440** |
| | **பெறுமானத்தேய்வு** | **2018 ஏப்ரல் 01இல் உள்ளவாறான மீதி** | **ஆண்டிற்கான விதிப்பனவு** | **மாற்றம்** | **2019 மார்ச் 31இல் உள்ளவாறான மீதி** |
| | கட்டிடங்கள் | 41,516,849 | 15,754,847 | (57,271,696) | - |
| | உள்ளக வீதிகள் | 12,884,165 | 3,256,986 | - | 16,141,152 |
| | பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் | 52,372,300 | 10,287,039 | (62,659,340) | - |
| | மோட்டார் வாகனங்கள் | 80,455,352 | 8,767,988 | (89,223,340) | - |
| | அலுவலக உபகரணம | 2,178,138 | 80,865 | (2,259,003) | - |
| | மின் உபகரணம் | 7,525,143 | 429,817 | (7,954,959) | - |
| | தளபாடங்களும் பொருத்திகளும் | 5,901,921 | 707,299 | (6,609,220) | - |
| | ஆய்வுகூட உபகரணம | 407,463 | 157,650 | (565,113) | - |
| | கணினி வன்பொருட்களும் மென்பொருட்களும் | 13,567,144 | 612,378 | (14,179,522) | - |
| | நானாவித சொத்துக்கள் | 10,615,389 | 332,798 | (10,948,187) | - |
| | | **227,423,865** | **40,387,668** | **(251,670,381)** | **16,141,152** |
| | **தேறிய ஏட்டுப் பெறுமதி** | **2018 ஏப்ரல் 01இல் உள்ளவாறான மீதி** | **ஆண்டிற்கான விதிப்பனவு** | | **2019 மார்ச் 31இல் உள்ளவாறான மீதி** |
| | கட்டிடங்கள் | 131,226,496 | 15,486,004 | - | 146,712,500 |
| | உள்ளக வீதிகள் | 52,255,565 | (3,256,986) | - | 48,998,578 |
| | பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் | 86,429,969 | 13,970,015 | - | 100,399,984 |
| | மோட்டார் வாகனங்கள் | 18,297,809 | 45,217,191 | - | 63,515,000 |
| | அலுவலக உபகரணம | 403,261 | 6,500,190 | - | 6,903,452 |
| | மின் உபகரணம் | 5,821,765 | (5,821,765) | - | - |
| | தளபாடங்களும் பொருத்திகளும் | 1,716,463 | 5,047,596 | - | 6,764,059 |
| | ஆய்வுகூட உபகரணம | 1,568,830 | (1,568,830) | - | - |
| | கணினி வன்பொருட்களும் மென்பொருட்களும் | 1,261,854 | 1,769,861 | - | 3,031,715 |
| | நானாவித சொத்துக்கள் | 668,133 | (668,133) | - | - |
| | | **299,650,145** | **76,675,143** | **-** | **376,325,288** |
| | ***முடிவுறா மூலதன வேலை*** | **2018 ஏப்ரல் 01இல் உள்ளவாறான மீதி** | **சேர்ப்பனவு** | **மாற்றம்** | **2019 மார்ச் 31இல் உள்ளவாறான மீதி** |
| | புதிய ஆலை ஸ்தாபிப்பு | 7,440,000 | | | 7,440,000 |
| | புதிய வாகன நிறுத்துமிடம் | - | 73,258 | | 73,258 |
| | | **7,440,000** | **73,258** | **-** | **7,513,258** |
| | **மொத்தம்** | **307,090,145** | | | **383,838,546** |
| | **மதிப்பிழப்பிற்கான ஏற்பாடு** | **(12,045,374)** | (2,302,687) | - | **(14,348,061)** |
| | | **295,044,771** | | | **369,490,485** |
| | | | | ***2018/19*** | ***2017/18*** |
| **6** | ஒவ்வொன்றும் 10/- இன் 100,000/- பங்குகள் | | | **1,000,000** | **1,000,000** |

**வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனம**

**2019 மார்ச் 31 இல் முடிவுற்ற காலத்திற்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

*இலங்கை ரூபாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

| | | 2019 மார்ச் 31 | 2017/18 |
|---|---|---|---|
| **7** | **இருப்புகள்** | | |
| | வியாபார இருப்புக்கள் - எப்பாவல (முடிவுப் பொருட்கள்) | 18,090,779.78 | 23,706,481.83 |
| | (மூலப் பொருள்) | 12,658,574.72 | 11,777,438.44 |
| | வியாபார இருப்புக்கள - வாரியபொல | 2,608,619.24 | 5,523,274.07 |
| | தேறாத இலபத்திற்கான ஏற்பாடு | (171,909.32) | (460,887.24) |
| | பொதுவான இருப்புக்கள் | 75,758,990.94 | 71,035,576.88 |
| | | **108,945,055.36** | **111,581,883.98** |
| | வழக்கற்றுப்போன இருப்புக்களுக்கான ஏற்பாடு | (3,808,331.00) | (3,808,331.00) |
| | | **105,136,724.36** | **107,773,552.98** |
| | **வர்த்தகக் கிடைப்பனவுகள்** | | |
| **8** | கடன்பட்டோர் ERP/HERP விற்பனைகள்- எப்பாவல | 42,892,784.46 | 25,354,284.46 |
| | உடன் விற்பனைச் சேகரிப்பு A/C - எப்பாவல | (88,099.88) | (81,759.88) |
| | கடன்பட்டோர்- தென்னம் உரச் செயற்றிட்டம் | 2,800,645.20 | 4,353,465.20 |
| | (-) அறவிடமுடியா மற்றும் ஐயப்பாடான கடன்களுக்கான ஏற்பாடு | (10,407,655.70) | (10,407,655.70) |
| | | **35,197,674.08** | **19,218,334.08** |
| **9** | **வைப்புக்கள், முன்கொடுப்பனவுகள், ஏனைய கிடைப்பனவுகள்** | | ***(Re-stated)*** |
| | ஊழியர் கடனும் முற்பணங்களும் | 47,041,658.91 | 50,451,054.95 |
| | வைப்புக்களும் முன்கொடுப்பனவுகளும் | 4,389,811.11 | 2,650,156.20 |
| | குறுங்கால முதலீடுகளிலிருந்து கிடைக்கவேண்டிய வட்டி -FD | 11,721,935.27 | 10,840,653.21 |
| | குறுங்கால முதலீடுகளிலிருந்து கிடைக்கவேண்டிய வட்டி -REPO | 30,741.76 | 24,527.47 |
| | | **63,184,147.05** | **63,966,391.83** |
| **10** | **நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள்** | | |
| | நிலையான வைப்புக்கள் | 270,119,791.19 | 236,738,858.36 |
| | | **270,119,791.19** | **236,738,858.36** |
| **11** | **காசும் காசுக்குச் சமனானவைகளும்** | | |
